விசேஷகால ஆராதனை முறைமைகள்

திருநெல்வேலி

அத்தியக்ஷரவர்கள் அனுமதி பெற்றது.

1941

பொருளடக்கம்

1. அஸ்திபாரக் கல் வைக்கும் ஆராதனை.
2. தேவாலயப் பிரதிஷ்டை செய்யும் ஆராதனை.
3. கிரஹப்பிரவேச ஆராதனை.
4. பரி. ஞானஸ்நானம் பெற விரும்புவோரை ஏற்றுக்கொள்ளும் ஆராதனை.
5. பரி. நற்கருணை ஆயத்த ஆராதனை.
6. மத்தியான ஜெபம்.
7. இரவு ஜெபம்.
8. அறுப்பின் பண்டிகை ஆராதனை.

M. h. ... H.M.S.

அஸ்திபாரக்கல்லை வைக்கும் ஆராதனை.

எல்லாரும் கிரமமாய் நின்றுகொண்டிருக்க, ஒரு கீதத்தைப்பாடிய பின் ஆராதனை நடத்துகிறவர் சொல்வதாவது:

சர்வ வல்லமையுள்ள கடவுள் எல்லா மனிதர் மேலும் இரக்கத்தையும் கிருபையையும் பொழிந்தருள வேண்டுமென்று வேண்டிக் கொள்வோமாக.

பிதாவாகிய தேவனே, எங்களுக்கு இரங்கும்.

மறு: பிதாவாகிய தேவனே, எங்களுக்கு இரங்கும்.

குமாரனாகிய தேவனே, எங்களுக்கு இரங்கும்.

மறு: குமாரனாகிய தேவனே, எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்த ஆவியாகிய தேவனே, எங்களுக்கு இரங்கும்.

மறு: பரிசுத்த ஆவியாகிய தேவனே, எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்தமும் ஆனந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏக தேவனே, எங்களுக்கு இரங்கும்.

மறு: பரிசுத்தமும் ஆனந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏக தேவனே, எங்களுக்கு இரங்கும்.

சகல நன்மைகளுக்கும் காரணராகிய கடவுளைத் துதிப்போமாக.

தேவரீர் மனுகுலத்திற்காகப் பரிதபித்து, எல்லா மானிடருக்கும் இரட்சண்ய வாசலைத் திறந்தருளினதற்காக,

மறு: உம்மைத் துதிக்கிறோம், கர்த்தாவே.

புறஜாதியாருக்கு ஒளியாகவும், உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், உமது திருக்குமாரனை அனுப்பினதற்காக,

மறு: உம்மைத் துதிக்கிறோம், கர்த்தாவே.

இந்த நாட்டிலும் சுவிசேஷ ஒளி வீசத் தேவரீர் சித்தங் கொண்டதற்காக,

மறு: உம்மைத் துதிக்கிறோம், கர்த்தாவே.

உமது திருச்சபையில் உண்மையாய் ஊழியஞ்செய்து உம்மை மகிமைப்படுத்தின எல்லாப் பக்தருக்காகவும்,

மறு: உம்மைத் துதிக்கிறோம், கர்த்தாவே.

உம்மைப்பற்றிய விசுவாசத்திலும் பயபக்தியிலும் நடந்து நித்திரை அடைந்தவர்களுக்காக,

மறு: உம்மைத் துதிக்கிறோம், கர்த்தாவே.

இந்தக் காலத்தில் உமக்குச் சாட்சிகளும் ஊழியக்காரருமாய் இருக்கும்படி தேவரீர் எங்களை அழைத்ததற்காக,

மறு: உம்மைத் துதிக்கிறோம், கர்த்தாவே.

உம்மைச் சேவிக்கும்படி எங்களைப் பலப்படுத்தி வருகிற உமது நல்ல ஆவிக்காகவும்,

மறு: உம்மைத் துதிக்கிறோம், கர்த்தாவே.

எல்லாரும் இன்னும் நின்றுகொண்டிருக்க, ஆராதனை நடத்துகிறவர் சொல்வதாவது:

மன்றாடுவோமாக

பரலோகத்திலிருந்து வரும் சமாதானமும் ஆத்தும இரட்சிப்பும் நமக்குக் கிடைக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்வோமாக.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

உலகத்தார் எல்லாருடைய க்ஷேமத்திற்காகவும் நல் வாழ்வுக்காகவும் வேண்டிக்கொள்வோமாக.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

உலகமெங்குமுள்ள திருச்சபைக்காக வேண்டிக்கொள்வோமாக.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு : எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

......ஆகிய நமது அத்தியக்ஷருக்காகவும், இந்த அத்தியக்ஷாதீனத்தில் ஊழியஞ்செய்கிற யாவருக்காகவும் வேண்டுதல் செய்வோமாக.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு : எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

கிறிஸ்துவை அறியாதவர்களுக்காகவும் அவர்கள் இரட்சிப்பு அடைவதற்காகவும் வேண்டுதல் செய்வோமாக.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு : எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

பரிசுத்தவான்களையும் இரத்தச் சாட்சிகளையும் பின்தொடரவும், கிறிஸ்துவின் சிலுவையைச் சுமக்கவும், ஆண்டவர் நமக்குக் கிருபை தந்தருள வேண்டிக்கொள்வோமாக.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு : எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

இப்பொழுது நாம் செய்யத்தொடங்குகிற வேலை இன்பமாய் முடிவுபெறும்படி வேண்டிக்கொள்வோமாக.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு : எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

இறுதியில் நமக்கு நித்திய ஜீவனும், பேரின்பமும் அருளப்பட வேண்டுமென்று வேண்டிக்கொள்வோமாக.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு : எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

[*பின்வரும் சங்கீதங்களிலொன்றை வாசிக்கலாம்* : **121, 127, 132,**]

பாடம்.

ஆலய அஸ்திபாரம்: எஸ்றா 3: 10—11. சங். 132. 1-7, 13, 16.
பாடசாலை அஸ்திபாரம்: யோபு 28: 12—14, 23—28.
வீட்டு அஸ்திபாரம்: மத்தேயு 7: 24—29.

(ஒரு கீதம் பாடியபின் பிரசங்கம் செய்யலாம்)

ஜெபம்பண்ணக்கடவோம்.

ஆலய அஸ்திபாரம்:

மனிதர் கைகளினால் கட்டப்படும் ஆலயங்களில் உமது திவ்விய சமுகத்தை வெளிப்படுத்தவும், இரண்டு பேராவது மூன்று பேராவது உமது நாமத்தினால் கூடிவரும்பொழுது அவர்கள் மத்தியில் பிரசன்னமாகவும் சித்தங்கொண்டிருக்கிற பராபரனே, இவ்விடத்தைப் பிரத்தியேகப்படுத்தி உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டும்படி தேவரீர் உம்முடைய அடியாரின் மனதில் உண்டாக்கிய நல் விருப்பத்திற்காக உம்மைத் துதிக்கிறோம். நாங்கள் செய்கிற வேலையை தேவரீர் ஆசீர்வதித்து, இவ்விடத்தில் எப்பொழுதும் உமது ஜனங்களைச் சந்தித்து, உமது கிருபையின் வரப்பிரசாதங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடே கேட்டுக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

பாடசாலை அஸ்திபாரம்:

உலகம் சுய ஞானத்தினால் உம்மை அறியாத காலத்தில், மெஞ்ஞானம் இன்னதென்று உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தின கடவுளே, இவ்விடத்தில் கட்டப்படும் பாடசாலையில் பயிற்சிபெறும் யாவரும் மெஞ்ஞானம் அடைந்தவர்களாய் உம்மைச் சேவித்து வரும்படி, நாங்கள் செய்கிற வேலையைத் தேவரீர் ஆசீர்வதித்து, எப்பொழுதும் இவ்விடத்தில் ஞானத்தின் ஆவியைப் பொழிந்தருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறோம். **ஆமென்.**

வீட்டு அஸ்திபாரம்:

உலகத்தை உண்டாக்கி அதை மனுப்புத்திரருக்கு இருப்பிடமாகத் தந்தருளிய சர்வ வல்லமையுள்ள தேவனே, உமது பிள்ளைகள் இங்கே இருக்கும் காலத்தில் அவர்கள் வீடுகளைக்கட்டி, அவற்றில் சந்தோஷமாய் வாசம் செய்வது உமது திருவுளச் சித்தமானதால், உமது அடியார் கட்டப்போகிற இவ்வீட்டிற்கு, உமது திருநாமத்தினாலே அஸ்திபாரக் கல்லை வைக்கிறோம். இங்கே கட்டப்படும் வீட்டில் வாசம் செய்வோர், உமக்கு மகிமையாகவும் மற்றவர்களுக்கு முன் மாதிரியாகவும் ஜீவியஞ் செய்யும்படி, தேவரீர் இங்கே செய்யப்படும் வேலையை ஆசீர்வதித்து, எப்பொழுதும் உமது பிரசன்னத்தைக் கட்டளையிட்டருளி அவர்களைப் பரிசுத்தப்படுத்தி யருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமேன்.

(பின்பு அஸ்திபாரக் கல் வைக்கப்படும்)

கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தை உறுதியாய்க் கைக்கொண்டு,

தேவனுடைய திருநாமத்துக்கு மகிமை உண்டாகவும்,

(ஆலயம்) அவருடைய திருச்சபைக்கு நன்மையாகவும்,

(பாடசாலை) தேவனைப்பற்றிய மெய்யான அறிவு விருத்தியாகவும்,

(வீடு) இவ்விடத்தில் வாசம் செய்வோருக்கு க்ஷேமமாகவும்,

இந்த அஸ்திபாரக் கல்லை ஆசீர்வதித்து வைக்கிறோம்,

பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமேன்.

(பின்பு ஆராதனை நடத்துகிறவர் சொல்வதாவது)

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல,

பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணுமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

நாம் செய்யத் தொடங்கிய வேலை இன்பமாய் முடிவுபெற வேண்டிக்கொள்வோமாக

கர்த்தாவே, உமது திருநாமத்தை முன்னிட்டு நாங்கள் இப்பொழுது செய்ததைத் தேவரீர் அங்கீகரித்து ஆசீர்வதித்தருள வேண்டுமென்று தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறேம். அஸ்திபாரம் போட்டிருக்கிற நாங்கள் இவ்விடத்தில் கட்டப்படும்............ஐப் பிரதிஷ்டைபண்ணி, அதிக சந்தோஷத்தோடே அதில் பிரவேசித்து உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தும்படி, இங்கே செய்யப்படும் வேலை விக்கினமின்றி முடிவுபெறக் கிருபைகூர்ந்து, எங்களைக் காப்பாற்றியருளவேண்டுமென்று, மெய்யான அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறேம். ஆமென்.

இந்தக் கட்டட வேலை செய்பவருக்காக ஜெபம் பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, இவ்விடத்தில் தங்கள் கைகளினுல் உமது மகிமைக்கென்று வேலைசெய்பவரைத் தேவரீர் கண்ணேக்கி, இம்மையில் அவர்கள் செய்யும் வேலைக்குப் பிரதிபலனைக்கொடுத்து, மறுமையில் உமது நித்திய ஆலயத்தில் அவர்கள் ஜீவனுள்ள கற்களாகக் கட்டப்படும்படி அருள்புரியவேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டுக் கேட்டுக்கொள்ளுகிறேம். ஆமென்.

அதன் பின் பொதுவான ஸ்தோத்திரம் வழங்கலாம். காணிக்கை சேகரிக்கப்படுமேயாயின், ஒரு கீதத்தையும் பாடலாம்.

ஜெபம் பண்ணக்கடவோம்.

சீயோனில் உமது திருக்குமாரனை விலையேறப்பெற்ற தலைக் கல்லாக வைத்து, அவர்மேல் உமது திருச்சபையைக் கட்டிவருகிற சர்வ வல்லமையுள்ள தேவனே, உமது நித்திய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இளைப்பாறுதல் அடைய நாங்கள் பாத்திரராய்க் காணப்படுவதற்காக உமது மகிமையைத் தரிசிக்கும்படி தேவரீர் எங்கள் கண்களைத் திறந்து, எங்கள் கைகளின் கிரியைகளை ஆசீர்வதித்து, நித்திய ஜீவ வழியில் அடியாரை நடத்தியருள வேண்டுமென்று, அவரை முன்னிட்டுத் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உங்களைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உங்கள்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள் மேல் பிரசன்னமாக்கி, உங்களுக்குச் சமாதானம் கட்டளையிடக் கடவர்.

ஆமென்.

Printed at the Hilal Press, Tirunelveli.—8—'41.

தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்யும் முறைமை

சபையார் ஆலயத்தில் ஒழுங்காய் உட்கார்ந்திருக்க, ஸ்தலக் குரு பாடகரோடு ஆலயத்தினுட் சென்று கிராதியண்டை நின்று சொல்லவேண்டியதாவது :—

பிரியமானவர்களே, இந்தத் தேவாலயத்தையும் அதிலுள்ள யாவற்றையும் பரிசுத்தப்படுத்திப் பிரதிஷ்டை செய்ய இங்கே கூடி வந்திருக்கிறோம். இப்பொழுது கர்த்தருக்குள் சங்கை பொருந்திய நம்முடைய தகப்பனும், இவ்வத்தியக்ஷாதீனத்தின் அத்தியக்ஷருமாகிய................அத்தியக்ஷரை வரவேற்று, அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தால், இவைகளெல்லாவற்றையும் பிரதிஷ்டை செய்ய உங்கள் பேராலே கேட்டுக்கொள்ளப் போகிறோம்.

குரு : கர்த்தர் உங்களோ டிருப்பாராக.

ஜன : அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

ஜெபம்பண்ணக்கடவோம்

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, ...

சுருக்க ஜெபம்

பராபரனே, உம்மாலேயன்றி நாங்கள் உமக்குப் பிரியமாய் நடக்கத் திராணியற்றவர்களாய் இருக்கிறபடியால், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எல்லாக் காரியங்களிலேயும் உம்முடைய பரிசுத்த ஆவி எங்கள் இருதயத்தை ஆண்டு நடத்தும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கிருபை செய்தருளும். ஆமென்.

¶ **பின்பு இரண்டொரு கவிகள் பாடப்படும். அப்பொழுது குருவானவரும் நியமிக்கப்பட்டிருக்கும் சபை மூப்பரும் பாடகரும் வெளியே சென்று ஆலய முன் மண்டபத்தில் அத்தியக்ஷரையும் மற்றக் குருமாரையும சந்திக்கையில அத்தியக்ஷர் சொல்வதாவது:**

கர்த்தர் உங்களோடிருப்பாராக

மறு: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

¶ பின்பு சபை மூப்பரிலொருவர் தேவாலயப் பிரதிஷ்டைப் பத்திரத்தை வாசித்து, அத்தியக்ஷரிடம் அதைக் கொடுத்தபின் அத்தியக்ஷர் சொல்லுவதாவது:—

அத்: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறபடியே செய்வோம்.

¶ தேவாலயப் பிரதிஷ்டைக்கு அத்தியக்ஷர் வராதிருந்தால் ஆராதனையை ஆலய முன்மண்டபத்தில் ஆரம்பித்து, பத்திரத்தை வாசித்து, பிரதிஷ்டை செய்வதற்கு அத்தியக்ஷரால் அதிகாரம் பெற்ற குருவானவரிடம் அதைக் கொடுக்க, ஷை குருவானவர் சொல்லுவதாவது:— "நமது அத்தியக்ஷர் கொடுத்திருக்கும் அனுமதியின் பேரில் அவருக்குப் பதிலாக நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறபடியே செய்வேன்."

¶ பின்பு பாடகரும், சபை மூப்பரும், குருமாரும், அத்தியக்ஷரும் பாடிக்கொண்டு ஆலயத்தைச்சுற்றிப் பவனிவந்து, ஆலயத்தினுட் பிரவேசிக்கும்பொழுது, பின்வரும் சங்கீதம் வாசிக்க அல்லது பாடப்படும்.

சங்கீதம் 122.

1. கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று: எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.

2. எருசலேமே, உன் வாசல்களில்: எங்கள் கால்கள் நிற்கலாயிற்று.

3. எருசலேம் இசைவிணைப்பான: நகரமாகக் கட்டப்பட்டிருக்கிறது.

4. அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக் கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள்: கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும்.

5. அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய: நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கிறது.

6. எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்: உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக.

7. உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும்: உன் அரண்மனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக.

8. என் சகோதரர் நிமித்தமும் என் சிநேகிதர் நிமித்தமும்: உன்னில் சமாதானம் இருப்பதாக என்பேன்.

9. உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தினிமித்தம்: உனக்கு நன்மையுண்டாகத் தேடுவேன்.

¶ எல்லோரும் உட்பிரவேசித்து அத்தியக்ஷரும் குருமாரும் திரு மேசை அண்டையில் வைத்திருக்கும் ஆசனங்களுக்குச் சென்றபின்பு பின் வரும் லித்தானியா வாசிக்க அல்லது பாடப்படும்:—

ஜெபம்பண்ணக்கடவோம்

பரம பிதாவாகிய தேவனே,
எங்களுக்கு இரங்கும்.

சபா நாயகராகிய தேவகுமாரனே,
எங்களுக்கு இரங்கும்.

எங்களைப் பரிசுத்தஞ் செய்கிற தேவனாகிய பரிசுத்த ஆவியே,
எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்த திரித்துவமே, நித்திய தேவனே,
எங்களுக்கு இரங்கும்.

எங்கள் நோய்களைக் குணமாக்கி எங்கள் பாவங்களை மன்னிக்கிற கிறிஸ்துவே,
எங்களுக்குச் சகாயஞ் செய்யும், தயவுள்ள கர்த்தாவே.

காணமற்போனதைத் தேடி இரட்சிக்கிறவரே,
எங்களுக்குச் சகாயஞ் செய்யும், தயவுள்ள கர்த்தாவே.

நித்திய ஜீவ வசனங்களை அருளினவரே,
எங்களுக்குச் சகாயஞ் செய்யும், தயவுள்ள கர்த்தாவே.

பன்னிரண்டு அப்போஸ்தலரைத் தெரிந்தெடுத்து உமது திருச் சபையை ஸ்தாபித்தவரே,
எங்களுக்குச் சகாயஞ் செய்யும், தயவுள்ள கர்த்தாவே.

எங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்து மகிமையோடே பரலோகத்துக்கேறி, எங்களுக்குள் வாசம்பண்ண உமது பரிசுத்த ஆவியை அனுப்பினவரே,

எங்களுக்குச் சகாயஞ் செய்யும், தயவுள்ள கர்த்தாவே.

கர்த்தராகிய பராபரனே, சகல தேசங்களிலுமுள்ள உமது திருச்சபையைப் பலப்படுத்தி விருத்தியடையச் செய்து, கிறிஸ்தவர்களெல்லாரையும் விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் அன்பிலும் இணைத்தருள வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உமது திருச்சபை உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துச் சகல ஜனங்களையும் சீஷராக்கும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்கிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அத்தியக்ஷர்மார், குருமார் யாவருக்கும் ஞானத்தையும் வல்லமையையும் அன்பையும் அருளி, தேவரீருக்குப் பணிவிடைக்காரராக அநேகரை அழைத்தருள வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

¶ **பின்பு அத்தியக்ஷர் பரிசுத்த நற்கருணை ஆராதனையை ஆரம்பிப்பார். அதில் பின்வரும் விசேஷித்த சுருக்க ஜெபங்கள் வழங்கப்படும்.**

சுருக்க ஜெபம்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, இந்தத் தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்யும் உற்சவத்தைக் கொண்டாடும்படி எங்களுக்குக் கிருபை செய்தவரே, பரிசுத்தமானது உமது ஆலயத்தின் நித்திய அலங்காரமாயிருக்கிறபடியால், தேவரீர் உமது அடியாரை ஆசீர்வதித்து, நாங்களும் உமக்குப் பிரியமும், பரிசுத்தமும், ஜீவனுமுள்ள ஆலயமாகக் கட்டப்படும்படி கிருபை புரிந்தருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

சகல பரிசுத்தவான்களின் திருநாளுக்குரிய சுருக்க ஜெபம்

தேவாலயத்திற்குத் தரிக்கப்படும் நாமத்திற்கிசைய இன்னொரு சுருக்க ஜெபமும் வழங்கலாம்.

நிருபவாக்கியத்துக்காக: 1 *ராஜா.* 8 : 22-30.

அல்லது

நிருபவாக்கியம்: 1 கொரி. 3. 9-17.

சுவிசேஷ வாக்கியம்: பரி. மத். 21. 12—16.

விசுவாசப் பிரமாணத்துக்குப்பின் ஒரு கீர்த்தனை அல்லது கீதம் பாடப்படும். அதன் பின்பு அத்தியக்ஷர் பிரசங்கம் செய்வார்.

பிரசங்கத்துக்குப்பின் சபையார் நின்றுகொண்டிருக்க, அத்தியக்ஷரும் குருமாரும் ஆலயத்தின் பலபாகங்களுக்கும் சென்று பின்வரும் ஜெபங்களைச் சொல்லுவார்கள். விசேஷித்த பாடங்கள் வாசிக்கப்படும். ஜெபங்களுக்கு முன் அவைகளுக்கேற்ற சில கவிகளையும் பாடலாம்.

சிறு ஜெபவீடாயிருந்தால் இந்த ஜெபங்களை அல்லது இவைகளில் சிலவற்றைக் கிராதி அண்டைநின்று சொல்லலாம். பாடங்களையும் மறுமொழி வசனங்களையும் வாசிக்காமல் விடலாம்.

ஞானஸ்நானத் தொட்டியண்டை

பாடம்.

தீத்து. 3. 5—7

“நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத் தக்கதாக, அவர் நமது ரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.”

ஜன: தேவரீருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

அத்: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்,

ஜன: தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்.

ஜெபம்.

கர்த்தாவே, இந்த ஞானஸ்நானத் தொட்டியில் (அல்லது, இந்த ஆலயத்தில்) ஞானஸ்நானம் பெறுபவர்கள் எல்லாரும் உமது பரிபூரண கிருபையைப் பெற்று, தெரிந்துகொள்ளப்பட்ட உமது உத்தம பிள்ளைகளின் கூட்டத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்கும்படி தேவரீர் அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

வாசிப்புப் பீடத்தண்டை

பாடம்

ரோமர். 15. 4

"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது."

ஜன: தேவரீருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

அத்: உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்,

ஜன: என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

ஜெபம்

கர்த்தாவே, இந்த இடத்தில் உமது பரிசுத்த வேதத்தை வாசிக்கும் யாவரும் அது தேவ வசனமென்று நினைவுகூர்ந்து ஜாக்கிரதையோடும் வணக்கத்தோடும் வாசிக்கும்படி, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் அவர்களை நிரப்பியருளும். கேட்கிற ஜனங்கள் அந்த வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொண்டு, உண்மையும் நன்மையுமான இருதயத்தில் அதைக் காத்துக்கொள்ளவும், பொறுமையுடன் பலன் கொடுக்கவும் தேவரீர் அருள் செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஆமென்.

பிரசங்கப் பீடத்தண்டை

பாடம்

2. தீமோ. 4: 1, 2.

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந் தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது:— சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு: எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு புத்திசொல்லு."

ஜன : தேவரீருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

அத் : நீங்கள் உலகமெங்கும் போய்,

ஜன : சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

ஜெபம்

கர்த்தாவே, இந்த இடத்தில் செய்யப்படும் பிரசங்கங்கள் இயேசுவைப் பற்றும் சாட்சியாய் விளங்கவும், ஜீவ வசனத்தைக் கேட்பவர் எல்லாரும் அதன்படி நடந்து சுவிசேஷத்திற்கு அலங்காரமாய் ஜீவிக்கவும், பிரசங்கஞ் செய்யும் யாவரையும் தேவரீர் தீர்க்கதரிசன ஆவியினாலே நிரப்பியருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ ***பின் வரும் ஜெபங்களைக் கிராதியண்டை நின்று சொல்லவேண்டும்.***

இவ்விடத்தில் திடப்படுத்தலைப் பெறுபவருக்காக ஜெபம் பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, கைகளை வைக்கும் நியமத்தால் உமது ஆசீர்வாதத்தைப் பெறும்படி இந்த இடத்தில் முழங்காற் படியிடும் யாவரும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியினால் பலமடையவும், உமது நித்திய ராஜ்யத்தில் சேருமளவும் நாள்தோறும் மென்மேலும்

அவரில் வளர்ந்தேறவும் கிருபைசெய்தருளும்படி எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

இவ்விடத்தில் விவாகம் செய்துகொள்ளும் யாவருக்காகவும்
ஜெபம் பண்ணக் கடவோம்.

கர்த்தாவே, இவ்விடத்தில் பரிசுத்த விவாகத்தில் இணைக்கப்படுபவர்கள், தங்களுக்குள்ளே செய்துகொள்ளும் வாக்குத்தத்தத்தையும், உடன்படிக்கையையும் உறுதியாய்க் கைக்கொண்டு நிறைவேற்றவும், எப்பொழுதும் பூரண அன்பும், சமாதானமும் உள்ளவர்களாய் ஒருமித்து வாழ்ந்து உமது கற்பனைகளின்படி நடந்துவரவும் அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஆமென்.

இவ்விடத்தில் செய்யப்படும் தேவ ஆராதனைகளில்
பணிவிடைசெய்யும் எல்லாருக்காகவும் ஜெபம் பண்ணக் கடவோம்.

சர்வ வல்லமையுள்ள கடவுளே, கேரூபின்களும் சேராபின்களும் ஓயாமல் புகழ்ந்து போற்றும் பரம ராஜாவே, இங்கு உமது சன்னிதானத்தில் பணிவிடைசெய்யும் எல்லாரையும் உமது ஆசீர்வாதத்தால் ஆதரித்து, அவர்கள் இம்மையில் சுத்த இருதயமுள்ளவர்களாய் ஆவியோடும் உண்மையோடும் உம்மை ஆராதிக்கவும், மறுமையில் உமது பரம சேனையின் மாசற்ற பணிவிடையில் பங்கு பெறவும் கிருபைசெய்ய வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ பின்பு அத்தியக்ஷர் திருமேசையண்டை சென்று வாசிப்பதாவது:

பாடம். 1 கொரி. 10: 16, 17.

“நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.”

ஜன: தேவரீருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

அந்: என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி,

ஜன: என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

அந்: என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன்,

ஜன: என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.

நித்திய தேவனே, மனிதர் பேரிலுள்ள உமது அளவில்லாத இரக்கத்தினால் எங்கள் பாவங்களை நீக்கும் பலியாகவும், எங்களுக்கு ஞானாகாரமாகவும் உமது திருக் குமாரனை அனுப்பினவரே, இவ்விடத்தில் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் நினைவு கூர்ந்து, அவருடைய அன்பின் யத்தனங்களை உட்கொள்ளும் யாவர் மேலும் உமது கிருபையைப் பொழிந்து எப்பொழுதும் அவர்கள் கிறிஸ்துவிலும், கிறிஸ்து அவர்களிலும் நிலைத்திருக்கும்படி, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக சதாகாலங்களிலும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் ஆண்டவரும் உமது குமாரனுமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அநுக்கிரகஞ்செய்தருளும். ஆமென்.

¶ **பின்பு குருமாரிலொருவர் சொல்லவேண்டியதாவது:**

இந்த ஆலயத்தில் ஆராதிக்கும் சபையாரைத் தேவன் ஆசீர்வதிக்கும்படி முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணக் கடவோம்.

பரமபிதாவே, உம்முடைய ஜனங்களெல்லாரும் உமது வசனத்தை அறிந்து விசுவாசித்து, தங்களுடைய நடக்கையினாலே உம்மைப் பிரஸ்தாபப்படுத்தும்படி, அவர்களுக்கு உமது கிருபையைத் தந்தருள வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

ஆவியோடும் உண்மையோடும் உம்மைத் தொழுதுகொண்டு, மனிதருக்கு முன்பாக உம்மைத் தைரியமாய் அறிக்கையிடும்படி எங்களுக்குக் கிருபை செய்ய வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உமது பரிசுத்த சாக்கிரமெந்தை நாங்கள் பக்திவிநயமாய் உட்கொண்டு, உமது பரம கிருபையால் சரீரத்திலும் ஆத்துமத்திலும் பலம் அடையும்படி நீர் அருள்புரிய வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக் கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உமது ஜனங்கள் சகோதர சிநேகத்தில் வாழும்படி அவர்கள் மேல் ஐக்கியத்தின் ஆவியைப் பொழிந்தருள வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

இவ்விடத்தில் நிர்விசாரிகளை உணர்வடையச் செய்து, விசுவாசிகளுக்கு உமது இரட்சிப்பை அருளிச்செய்யும். ஆமென்.

குறைந்த விசுவாசமுள்ளவர்களுக்கு விசுவாச உறுதியையும், சோர்ந்து போகிறவர்களுக்கு மன ஊக்கத்தையும் கட்டளையிட்டருளும். ஆமென்.

சோதனைக்குட்படுகிறவர்களுக்குச் சகாயத்தையும், துக்கப்படுகிறவர்களுக்கு ஆறுதலையும் அனுக்கிரகஞ் செய்யும். ஆமென்.

இளைஞருக்கு உற்சாகத்தையும், வயோதிகருக்கு மனரம்மியத்தையும் அருளிச் செய்யும். ஆமென்.

இப்பொழுது நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய், நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலும் கிறிஸ்து இயேசுவிலும் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

¶ பின்பு அத்தியக்ஷர் எழுந்து சபையாரைப் பார்த்துச்சொல்லுவதாவது:

கர்த்தர் உங்களோடு இருப்பாராக.

ஜன: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

அத்: உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

ஜன: எங்கள் இருதயத்தைக்கர்த்தரிடத்தில்உயர்த்துகிறோம்.

அத்: நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

ஜன: அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறது, மிகவும் தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாது. உமது மகிமை எங்கும் வியாபித்திருந்தும், உம்மை ஆராதிப்பதற்கென்று பரிசுத்த ஸ்தலங்களை நியமித்து, உமது விசுவாசமுள்ள சபையின்மேல் கிருபையின் வரப்பிரசாதங்களைப் பொழிந்தருளுகிறீர்.

பரமபிதாவே, நாங்கள் செய்கிற விண்ணப்பத்தைத் திருவுள்ளத்தில் கொண்டருளி, அபாத்திரரான உமது அடியாராகிய நாங்கள் உமது நாம மகிமைக்கென்று இப்பொழுது பிரதிஷ்டை செய்கிற இந்த ஆலயத்தைச் சொந்தமாக அங்கீகரித்து, உமது பரிசுத்த ஆவியினால் எங்களையும் இந்த ஸ்தலத்தையும் பரிசுத்தப்படுத்தியருளும்.

இரக்கமுள்ள ஆண்டவரே, உமது ஜனங்கள் இவ்விடத்தில் உம்மை நோக்கி ஜெபம்பண்ணும் பொழுதெல்லாம் உமது செவியைச் சாய்த்து அவர்களுடைய ஜெபங்களைக் கேட்டருளும்.

உலகம் அனைத்தையும் ஆண்டு நடத்துகிற தேவனே, மகத்துவம் பொருந்திய பிதாவே,

பரிசுத்தவான்களுடைய ராஜாவே, சபாநாயகராகிய இயேசு கிறிஸ்துவே,

சகலத்தையும் ஆசீர்வதித்துப் பரிசுத்தஞ்செய்கிற பரிசுத்த ஆவியே,

பரிசுத்தமும் ஆனந்தமும் மகிமையுமான திரித்துவமே, உமது சர்வவல்லமையின் மகிமையால் இந்தத் திருமேசையையும் இந்த ஆலயத்தையும், அதிலுள்ள சகல பணி முட்டுகளையும் ஆசீர்வதித்துப் பரிசுத்தஞ் செய்தருள வேண்டுமென்று, மிகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற தேவரீருக்கே சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

ஜெபம் பண்ணக்கடவோம்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

¶ **பின்பு அத்தியக்ஷர் திருமேசையிலும் பரிசுத்த ஸ்தலத்திலும் சிலுவை அடையாளத்தை வரையலாம். பின் அவர் சொல்ல வேண்டியதாவது :**

இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல்.

தேவனுடைய திருச்சபையில் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தினாலும் உத்தியோகத்தினாலும் இந்த.........ஆலயமும், இந்தத் திருமேசையும், ஏனைய பணி முட்டுகளும் சகல சாதாரண உபயோகத்தினின்றும் விலக்கப்பட்டுப் பிரதிஷ்டையாகி பரிசுத்தமா

யிருக்கின்றனவென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அறிவிக்கிறோம். ஆமென்.

நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

¶ **பின்பு ஜனங்களெல்லாரும் எழுந்துநின்று தோத்திர கீதமொன்றைப் பாடலாம்,**

¶ **அதன்பின் காணிக்கை வாசகம் வாசிக்கப்படும்.**

¶ **காணிக்கை படைக்கும்பொழுது அத்துடன் ஆலயக்கட்டுமானத்திற்கு சகாயஞ் செய்தவர்களின் பெயர்களடங்கிய ஜாபிதாவையும் அத்தியக்ஷரிடம் கொடுக்கலாம்.**

அத்தியக்ஷர் சொல்வதாவது:

கர்த்தாவே, எல்லாம் உம்மாலே உண்டானது.

ஜன: உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்.

எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, சதாகாலங்களிலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; கர்த்தாவே, மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும், மகத்துவமும் உமக்குரியன; வானத்திலும் பூமியிலுமுள்ள வைகளெல்லாம் உம்முடையவைகள்.

தேவரீருக்கே கனமும் மகிமையும் உண்டாகும்படி, இந்த ஆலயத்தைக் கட்ட உமது அடியாருக்கு விருப்பத்தையும் திராணியையும் கட்டளையிட்டருளினதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். கர்த்தாவே, இவர்களையும் இவர்கள் வீட்டாரையும், இவர்களுக்குள்ள யாவற்றையும் ஆசீர்வதித்து இவர்கள் கைகளின் கிரியையை அவர்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.

இந்த ஆலயம் கட்டப்படும்படி ஜெபித்து உழைத்து, உம்மிடத்தில் விசுவாசமும் பயபக்தியும் உள்ளவர்களாய் ஜீவித்துப்போன உமது அடியார் எல்லாருக்காகவும், நாங்கள் உம்முடைய பரிசுத்த நாமத்தைத் துதித்து உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

இவ்விடத்தில் தேவரீரை ஆராதிக்கும் உமது அடியார் எல்லாரும், உமக்குக் கனமும் மகிமையுமுண்டாக இந்த ஆலயத்தை ஏற்றவாறு உபயோகித்து, உத்தம கிறிஸ்தவர்களாய் விளங்கும்படி கிருபை தந்தருளவேண்டுமென்று உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடே வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

¶ **பின்பு திருமேசையின்மேல் துப்பட்டியை விரித்து அப்பத்தையும் திராட்சரசத்தையும் வைக்கவேண்டும்.**

¶ **பின்பு அத்தியக்ஷர் இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்து சபைக்காகச் சொல்லப்படும் ஜெபத்தை ஆரம்பித்து, பரி. நற்கருணை ஆராதனையின் இரண்டாம் பாகத்தை நடத்துவார். பின்வரும் விசேஷித்த முகவுரை வழங்கலாம்.**

வானங்களும் வானாதிவானங்களும் உம்மைக் கொள்ளாது. உமது மகிமை எங்கும் வியாபித்திருந்தும், உம்மை ஆராதிப்பதற்கென்று பரிசுத்த ஸ்தலங்களை நியமித்து, விசுவாசமுள்ள உமது சபையின்மேல் கிருபையின் வரப்பிரசாதங்களைப் பொழிந்தருளுகிறீர்: ஆதாலால், தூதரோடும் etc.

¶ **பின்வரும் சுருக்க ஜெபமும் ஆசீர்வாதமும் கடைசியில் உபயோகிக்கப்படவேண்டும்.**

சுருக்க ஜெபம்

எங்கள் பரம பிதாவாகிய தேவனே, பரிசுத்த அலங்காரத்துடன் உம்மைத் தொழுது கொள்வதற்கு, இந்த ஆலயத்தைக் கட்டிப் பிரதிஷ்டை செய்திருக்கிறோம். உமது மகிமையைப் பிரசித்தப்படுத்தும்படி இவ்விடத்தை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிற நாங்கள், ஆவிக்குரிய மாளிகையாகக் கட்டப்படவும், உமக்குப் பிரியமான நைவேத்தியங்களைச் செலுத்திவரவும் மனுஷருக்கு முன்பாக உமது ஒளியைப் பிரகாசிக்கப் பண்ணவும் அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

ஆசீர்வாதம்

எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாகிய தேவன் உங்களைத் தமது சத்தியத்தினாலும் கிருபையினாலும் நிரப்புவாராக. ஸ்திரமான விசுவாசத்திலும் உறுதியான நம்பிக்கையிலும் நிலைவரமான அன்பிலும் அவர் உங்களைக் காத்தருளுவாராக. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியுமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனுடைய ஆசீர்வாதம் உங்கள் மேல் தங்கி, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமென்.

பரி. நற்கருணை பரிமாறப்படாத ஜெப வீட்டைப் பிரதிஷ்டை செய்யும் முறைமை.

¶ இந்த முறைமையை முதல் லித்தானியா முடிய வாசிக்கவேண்டும். பின்பு முதலாம் பாடம் வாசிக்கவேண்டும்.

1.ம் பாடம்: 1 ராஜா. 8 : 22—30.

¶ பின்பு "கர்த்தர் சிருஷ்டித்த" என்னும் கீதம் பாட அல்லது வாசிக்கப்படும்.

¶ பின்பு இரண்டாம் பாடம் வாசிக்கப்படும்.

2-ம் பாடம்: பரி. மத். 21 : 12—16.

¶ பின்பு ஒரு கீதம் பாடப்படும். அதன்பின் அத்தியக்ஷர் பிரசங்கம் செய்வார். அதன்பின் காணிக்கைப் படைப்பு ஜெபம் முடிய ஆராதனை முறைமை வழங்க வேண்டும். ஆனால், திருமேஜை பிரதிஷ்டை ஜெபமும், அத்தியக்ஷர் சொல்லும் பிரதிஷ்டை வசனத்தில் திருமேசைக்குரிய வார்த்தைகளும் விடப்பட வேண்டும். அதன்பின் 'தேவனே உம்மைத் துதிக்கிறோம்' என்னும் கீதத்தைப் பாட, அல்லது வாசிக்கவேண்டும். அதன்பின் அத்தியக்ஷர் ஆராதனை முறைமையிலுள்ள கடைசிச் சுருக்க ஜெபத்தைச் சொல்லி ஆசீர்வாதங்கூறுவார்.

¶ பரி. நற்கருணை பரிமாறப்படும் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும் நேரத்தில் போந்த முகாந்தரத்தினால் பரி. நற்கருணை ஆராதனை நடத்தப்படாதிருந்தால், மேற்கூறிய 2-வது முறைமையுடன் திருமேசைப் பிரதிஷ்டை ஜெபத்தையும் பிரதிஷ்டை வசனத்தையும்

சொல்லி மறு தினத்தில் அல்லது அடுத்த ஞாயிற்றுக்கிழமையில் பரி. நற்கருணை ஆராதனையை நடத்தி ஆலயப் பிரதிஷ்டையைப் பூர்த்தியாக்கவேண்டும். பரி. நற்கருணை ஆராதனையில் 1-வது முறைமையில் கண்டிருக்கிற விசேஷித்த சுருக்க ஜெபங்களும் நிருப சுவிசேஷ வாக்கியங்களும் முகவுரையும் கடைசி சுருக்க ஜெபமும் ஆசீர்வாதமும் வழங்கவேண்டும்.

ஆலயக்கோபுரத்தைப் பிரதிஷ்டை செய்யும் முறைமை.

அத்: சீயோனைச் சுற்றி உலாவி,

மறு: அதின் கொத்தளங்களை எண்ணுங்கள்.

அத்: பின்வரும் சந்ததிக்கு நீங்கள் விவரிப்பதற்காக,

மறு: அதின் அலங்கத்தைக் கவனித்து அதின் அரண்மனைகளை உற்றுப்பாருங்கள்.

அத்: இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நம்முடைய தேவன்.

மறு: மரண பரியந்தம் நம்மை நடத்துவார்.

உன்னதத்தில் வாசமாயிருக்கிற பராபரனே, இந்தக் கோபுரத்தைக் கட்டி முடிக்க, தேவரீர் உமது அடியாருக்குக் கிருபை தந்தருளினதற்காக உம்மைத் துதிக்கிறோம். இதைக் காண்பவர்களெல்லாரும் உன்னதத்திலிருக்கிற தேவருக்கு நேராகத் தங்கள் இருதயங்களை உயர்த்தி, மேலானவைகளைச் சிந்திக்கவும், தேவரீர் உமது பரிசுத்தருக்கென்று ஆயத்தம் பண்ணியிருக்கிற அழியாத பொக்கிஷத்தை நாடவும் கிருபை செய்தருளவேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு மனத்தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

தேவனுடைய திருநாமத்துக்கு மகிமையாகவும், தேவனுடைய திருப்பிரசன்னத்திற்கு அத்தாட்சியாகவும், பரம ஜீவியத்துக்கு அடையாளமாகவும், இந்தக் கோபுரத்தைப் பிரதிஷ்டை செய்கிறோம். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

முன் மண்டபத்தைப் பிரதிஷ்டை செய்யும் முறைமை

¶ **அத்தியக்ஷரும், குருமாரும், பாடகரும் மண்டபத்தில் நிற்க, 84-ம் சங்கீதம் வாசிக்க அல்லது பாடப்படும்.**

சுருக்க ஜெபம்

பரமபிதாவே, இந்த மண்டபத்தின் வழியாய் உமது பரிசுத்த ஆலயத்தில் பிரவேசிக்கிற யாவரும், நல்வழியை விட்டு விலகாமல் எப்பொழுதும் உமது வசனமாகிய நன்னெறியில் நடந்து, இறுதியில் உமது பரம ஆலயத்தில் பிரவேசித்து நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி, உமது ஆவியினால் அவர்களைக் காத்தருள வேண்டுமென்று எங்கள் நாதர் இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

தேவனுடைய திருநாமத்துக்கு மகிமையாகவும், தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குப் போகும் வழியாகவும், இந்த மண்டபத்தைப் பிரதிஷ்டை செய்கிறோம். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

¶ **தேவாலயப் பணிமுட்டுகளில் யாதாமொன்று பிரதிஷ்டை செய்ய வேண்டுமாயின்:**

¶ **தேவாலயப் பிரதிஷ்டை முறைமையில் ஏற்ற பாகங்களை விசேஷித்த பாடம், சுருக்க ஜெபத்துடன் உபயோகிக்கலாம். ஆலயமணி பிரதிஷ்டை செய்யும்பொழுது பின்வரும் சுருக்க ஜெபங்கள் வழங்கப்படலாம்:**

ஆலய மணியைப் பிரதிஷ்டை செய்யும் முறைமை.

¶ **அத்தியக்ஷர் மணிக்குச் சமீபத்தில் நின்று சொல்வதாவது:**

அவைகளின் சத்தம் பூமியெங்கும்,

மறு: அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது.

¶ **பின், அத்தியக்ஷர் தன் கரத்தை மணியின்மேல் வைத்துச் சொல்வதாவது:**

மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதப்படும்.

சுருக்க ஜெபம்

கர்த்தாவே, தங்கள் காதுகளால் இந்த மணியின் ஓசையைக் கேட்கும் யாவரும் தங்கள் இருதயத்தில் உமது திவ்விய சத்தத்தைக் கேட்கவும், இரட்சிப்பின் தேவனாகிய உம்மண்டை சேரவும் கிருபை செய்ய வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ *அதின் பின் அத்தியக்ஷர் மணியை மூன்றுதரம் அடித்துச் சொல்வதாவது*

தேவனுடைய நாமத்திற்கு மகிமையாகவும், தேவனுடைய திருச் சன்னிதானத்திற்கு அத்தாட்சியாகவும், ஆலய ஆராதனைக்கு அழைப்பாகவும், இந்த மணியைப் பிரதிஷ்டை செய்கிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

ஜெபம்பண்ணக்கடவோம்

கர்த்தாவே, இந்த மணியின் ஓசையைக் கேட்கிற யாவரும் உம்மை நினைத்துக் கொள்ளவும், உமது பரிசுத்த ஆலயத்தில் உம்மை ஆராதிக்கவும், சபையின் மத்தியில் நீர் வாசஞ்செய்கிறீரென்று உணர்ந்துகொள்ளவும், நாங்கள் பிரதிஷ்டை செய்திருக்கிற இந்த மணியைத் தேவரீர் ஆசீர்வதித்து, இவ்விடத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் உம்மை வெளிப்படுத்தியருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

கோவில் பிரதிஷ்டை விண்ணப்பம்.

கர்த்தருக்குள் சங்கைபொருந்திய எங்கள் தகப்பனுகிய அத்தியக்ஷரவர்கள் திவ்விய சமுகத்துக்கு :—

............................சர்க்கிள்.................................

பாஸ்ற்றரேற்..ஊரிலிருக்கும்

இந்தியா, பர்மா, இலங்கை திருச்சபையின் அங்கத்தினரும் இதில் க்கையொப்பமிட்டவர்களுமாகிய நாங்கள் எங்களுக்காகவும் எங்கள் ஊரிலுள்ள ஷை சபையைச் சேர்ந்த மற்றும் கிறிஸ்தவர் களுக்காகவும், எங்கள் ஊரில் கட்டியிருக்கிற தேவாலயத்தைப் பிர திஷ்டை செய்யும்படி தங்களைப் பிரார்த்திக்க வந்திருக்கிறோம்.

கோவிலின் விபரம் இதனடியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் சபைக்காக டிரஸ்டி ஸ்தானத்தில் திருநெல்வேலி டயோ ஸிஸன் டிரஸ்ட் அசோஷியேஷன் ஆளுகையிலும் அனுபோகத்திலும் இந்தக் கோவில் இப்போது இருந்து வருகிறது. கோவில் சம்பந்த மாக எங்கள் சபையாரால் அதிகாரம் பெற்ற எங்கள் சபைப் பிரதி நிதிகள் ஷை அசோசியேஷனுக்கு டிரஸ்ட் நிபந்தனைகளை விபரித்துக் காட்டி ஒரு தஸ்தவேஜ் பிறப்பித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

(இங்கே கோவில் மனையினுடைய விஸ்தீரணம், எல்லை, கோவிலினுடைய அளவு முதலிய விபரங்களை விவரிக்கவும்.)

இந்த விண்ணப்பம் செய்ய எங்கள் சபை பாஸ்ற்றரேற் கமிட்டியார் ஹூ மீ உ பிறப்பித்த தீர்மானத்தினுல் எங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகையால், ஆண்டவனவர்கள் கிருபைசெய்து இந்தஆலயத்தை இந்தியா, பர்மா, இலங்கை திருச்சபையின் ஒழுங்குப்படிக்கும்

முறைமைப்படிக்கும் இந்த அத்தியக்ஷாதீன ஒழுங்குப்படிக்கும், முறைமைப்படிக்கும், சர்வவல்லமையுள்ள கடவுளுக்கு மகிமை யுண்டாகவும், இந்தச் சபையார் ஆத்தும நன்மையடையும் பொருட்டும், சர்வவல்லமையுள்ள கடவுளை ஆராதிக்கும் பரிசுத்த ஸ்தலமாகப் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

....

....

கையொப்பம்

Printed at the Hilal Press, Tirunelveli.—7-'41.

கிரஹப்பிரவேச ஆராதனை

I

¶ *எல்லாரும் கிரமமாய் நின்றுகொண்டிருக்க, ஒரு கீதத்தைப் பாடிய பின், ஆராதனை நடத்துகிறவர் சொல்லுவதாவது.* கீர்.277 "கீர்.189"

இந்த வீட்டுக்கும் இதில் வாசஞ்செய்யும் யாவருக்கும் சமாதான முண்டாவதாக. **ஆமேன்.**

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்,

மறுமொழி: அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா.

பராபரனே, மானிடரின் பிரயாசங்கள் விருதாவாய்ப் போகாதபடி அவர்களுக்குச் சகாயஞ்செய்து, உம்முடையவர்கள் மகத்தான கிரியைகளைச் செய்யக் கிருபைபுரிகிற கருணாகரனே, உமது திருநாமத்தை முன்னிட்டு நாங்கள் செய்கிற எல்லாக்காரியங்களையும் ஆசீர்வதித்து, உமக்குக் கனமும் மகிமையும் உண்டாக அவைகளை நிறைவேற்றும்படி உமது ஒத்தாசையைக் கட்டளையிட்டருளவேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

II

¶ *சபையார் இன்னும் நின்றுகொண்டிருக்க ஆராதனை நடத்துகிறவர் வீட்டுவாசலை அணுகி நிற்பார்.*

புதுவீடாயிருந்தால் குரு சொல்லும் ஆசீர்வாதம் :—

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால், இந்த வீட்டை ஆசீர்வதித்துப் பிரதிஷ்டை செய்கிறேன். **ஆமேன்.**

பொல்லாப்பு உனக்கு நேரிடாது.

மறு: வாதை உன் கூடாரத்தை அணுகாது.

உன் வழிகளில் எல்லாம் உன்னைக்காக்கும்படி,

மறு: உனக்காகத் தமது தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

கர்த்தாவே, இந்த வீட்டைத் தயவாய்க் கண்ணோக்கி, தீமையான யாவற்றையும் அகற்றி இதைக் காத்து, உமது பரிசுத்த தூதரை இதற்குக் காவலாக ஏற்படுத்தி, உமது பிரசன்னமாகிய வெளிச்சத்தால் இதை இடைவிடாமல் நிரப்பியருளவேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக் கொள்ளுகிறோம். **ஆமேன்.**

III

¶ ***அதன்பின் ஆராதனை நடத்துகிறவர் சபையாரோடே வீட்டுக்குள் பிரவேசிக்கையில் கீதம் பாடப்படும்.*** கீ. 245 "தேவபிதா"

பாடம்.

(குருவானவர் புத்தப்படி, விசேஷமான பாடம் ஒன்றை வாசிக்கலாம்)
2 சாமு. 7. 18-29

ஜெபம் பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்?

மறு: யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணுவான்?

உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து,

மறு: மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக.

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங் களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடைய வைகளே. **ஆமென்.**

ஆண்டவரே, உமது அடியாராகிய இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கி, இவர்கள் போக்கையும் வரத்தையும் காத்தருளும். விசுவாசம் இவர்களைத் தாங்குவதாக. நன்னம்பிக்கை இவர்களுக்குள் நிலைத்திருப்பதாக. அன்பு ஒழியாதிருப்பதாக. சரீரத்திலும் ஆத்துமத்திலும் ஆரோக்கியத்தையும் பலத்தையும் எப்பொழுதும் கொடுத்து இவர்களுக்குச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கட்டளையிட்டருளும். இவர்கள் எல்லாவற்றிலும் வார்த்தையினாலும், கிரியையினாலும் உம்மை மகிமைப்படுத்துவதற்கு ஏதுவாய், உமது பரிசுத்த ஆவியை நிறைவாய்ப் பொழிந்து இவர்களை ஆண்டு நடத்தி யருள வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடே பிரார்த்திக்கிறோம். **ஆமென்.**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்யமும் நம்மனைவ ரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. **ஆமென்.**

Printed at the Hilal Press, Tirunelveli—8-'41.

பரிசுத்த ஞானஸ்நானம் பெற விரும்புவோரை ஏற்றுக்கொள்ளும் ஆராதனை

¶ ஜனங்கள் தங்கள் முழுப் பெயரையும் முன்னதாகவே அறிவித்திருக்கவேண்டும். பெயர் ஜாபிதா குருவானவர் வசமிருப்பது நலம்.

¶ **இந்த முறைமையின் முதல் பாகம் ஆலயத்தின் பிரதான வாசலின் முன் வழங்கவேண்டும்.**

¶ **சபை மூப்பர் ஞானஸ்நானம் பெற விரும்புவோரைக் குருவினிடம் கொண்டுவந்து சொல்லவேண்டியதாவது :**

தகப்பனே, இவர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கேட்கிறார்கள். இவர்கள் உண்மையாய்க் கிறிஸ்துவின் பிள்ளைகள் ஆக விரும்புகிறார்கள் என்று நம்புகிறோம். ஆகையால் இவர்களை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

¶ **குரு அவர்கள் ஒவ்வொருவரையும் பேர் சொல்லிக் கேட்கவேண்டியதாவது :**

............நீ, கிறிஸ்தவனாக உண்மையாய் விரும்புகிறாயா?

மறு : அதையே விரும்புகிறேன்.

ஜெபம் பண்ணக்கடவோம்.

அன்புள்ள பிதாவே, இவர்கள் பாவத்தை விட்டுவிடவும் உமக்குப் பிள்ளைகள் ஆகவும் விரும்புகிறார்கள். இந்த நேரத்தில் தங்கள் தீர்மானத்தை உண்மையாய் அறிக்கையிட இவர்களுக்குக் கிருபை தாரும். வருங்காலத்தில் உம்மைவிட்டு விலகாமல் உமக்குப் பிள்ளைகளாய் நடக்கும்படி, இவர்களுக்குச் சகாயம் செய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

¶ **ஞானஸ்நானம் பெற விரும்புவோரைப் பார்த்து குரு சொல்லுவதாவது:**

கிறிஸ்தவர்களாக விரும்புகிறவர்கள் இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும் ரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்து மார்க்கத்திற்கு ஏற்காதவைகளைச் செய்யக்கூடாது.

விவாக விஷயமாய், கிறிஸ்து சபையின் சட்டங்களைக் கைக்கொண்டு, விவாக வாக்குத்தத்தங்களைக் காத்து நடக்கவேண்டும். யாவரோடும் அன்பும் சமாதானமுமாய் வாழவேண்டும். இயேசு கிறிஸ்துவை நேசித்து அவரை நோக்கி ஜெபிக்கவேண்டும். ஆலயத்துக்கு ஒழுங்காய் வரவேண்டும். தாங்கள் கிறிஸ்துவைப்பற்றி அறிந்தவைகளை மற்றவர்களுக்குச் சொல்லவேண்டும்.

ஆதலால், நான் உங்களிடம் கேட்கிறதாவது :—

குரு: நீ சகல விக்கிரக ஆராதனையையும், கிறிஸ்துவின் உபதேசத்துக்கு விரோதமான எல்லாப் பழக்க வழக்கங்களையும் வெறுத்துவிடுகிறாயா?

ஜனங்கள்: எல்லாவற்றையும் வெறுத்துவிடுகிறேன்.

குரு: இயேசுகிறிஸ்துவை ரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளுகிறாயா?

ஜனங்கள்: ஏற்றுக்கொள்ளுகிறேன்.

குரு: அவர் வெளிப்படுத்தின ஒரே மெய்யான கடவுளை மாத்திரம் கும்பிடத் தீர்மானித்திருக்கிறாயா?

ஜனங்கள்: தீர்மானித்திருக்கிறேன்.

குரு: சகலவிதமான துன்மார்க்கத்தையும் பொய்யையும் குடியையும் களவையும் வெறுத்துவிடுகிறாயா?

ஜனங்கள்: வெறுத்துவிடுகிறேன்.

குரு: விவாகத்தைப்பற்றி கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டிய சட்டங்கள் எவையென்று படித்துக் கைக்கொண்டு, விவாக வாக்குத்தத்தங்களைக் காத்து நடக்க ஒப்புக்கொள்ளுகிறாயா ?

ஜனங்கள்: ஒப்புக்கொள்ளுகிறேன்.

குரு: எல்லாரோடும் ஐக்கியமும் சிநேகமுமாயிருப்பாயா ?

ஜனங்கள்: இருப்பேன்.

குரு: நீ தனியாய் ஜெபஞ் செய்யவும், குடும்பத்தோடே ஜெபஞ் செய்யவும், கோயிலுக்கு ஒழுங்காய் வரவும் வாக்குக் கொடுக்கிறாயா ?

ஜனங்கள்: வாக்குக் கொடுக்கிறேன்.

குரு: நீ கிறிஸ்து மார்க்க சத்தியங்களைத் திட்டமாய்க் கற்றுக் கொண்டு மற்றவர்களுக்கு அறிவிப்பாயா ?

ஜனங்கள்: அவைகளைக் கற்றுக்கொண்டு அறிவிப்பேன்.

¶ **குரு ஒவ்வொருவரையும் பேர் சொல்லி அழைத்து,**

............நான் உன்னை ஞானஸ்நான ஆயத்தக்காரனாக ஏற்றுக்கொள்ளுகிறேன். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. **ஆமேன்.**

என்று சொல்லி ஆலயத்துக்குள் அனுப்பவும்.

¶ **எல்லாரும் உள்ளே வந்தவுடன் குருவானவர் நின்று அவர்களுக்குச் சொல்லும் ஆசீர்வாதம்:**

நமது ஆண்டவர் உங்களை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிப்பாராக. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாயிருக்கிற கடவுள் உங்கள் இருதயங்களில் இந்த நல் விருப்பத்தை உண்டாக்கினது போல, முடிவு பரியந்தம் அதில் நிலைத்திருக்கும்படி உங்களை ஸ்திரப் படுத்துவாராக. நீங்கள் பரிசுத்த ஞானஸ்நானத்தால் கிறிஸ்துவின் திருச்சபையில் சேர்க்கப்படும்படி, அவர் தமது கிருபையினால் உங்களைக் காத்து ஆயத்தப்படுத்துவாராக. **ஆமேன்.**

ஜெபம் பண்ணக்கடவோம்

குரு: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

ஜன: கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

குரு: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். **ஆமேன்.**

கீதம்.

அதன் பின் குரு பிரசங்கஞ் செய்யலாம்.

பின் வரும் ஜெபங்களில் ஒன்றேனும் வாசிக்கவேண்டும்.

1. சர்வவல்லமையுள்ள தேவனே, அந்தகாரத்தைவிட்டு ஒளியினிடத்தில் வர விரும்புகிற இவர்களுக்கு இரங்கும். பேய் பிசாசுகளைப் பற்றிய வீண் பயத்தை நீக்கி, தேவனுடைய பிள்ளைகளுக்கு ஏற்ற சுயாதீனத்தைக் கட்டளையிட்டருளும். இவர்களுடைய அடிமைத்தனத்தை நீக்கி, இவர்கள் எப்பொழுதும் உமது சந்நிதானத்தில் உமது பிள்ளைகளாய் மனமகிழும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கிருபை செய்தருளும். **ஆமேன்.**

2. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, ஆடுகளுக்காக உமது ஜீவனைத்தந்தருளிய நல்ல மேய்ப்பரே, அலைந்து போயிருந்த இந்த ஆடுகளைத் தேவரீர் உம்மிடம் திருப்பிக்கொண்டதற்காக உம்மைத் துதிக்கிறோம். இவர்கள் உம்மைவிட்டுப் போகாதபடி, உமது அன்பினால் இவர்களை உம்மிடத்தில் இழுத்துக்கொள்ளும். இவர்களை உமது

மந்தையில் சேர்த்துக்கொண்டு, உமது கிருபையினாலும் நற்போதனையினாலும் பலப்படுத்தியருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

3. பரிசுத்த ஆவியே, ஜீவனை அளிக்கிறவரே, திவ்விய அன்புக்குக் காரணரே, சகலவித அறியாமையையும் அகற்றி இவர்களைப் பிரகாசிப்பித்தருளும். பழைய பாவக்கறை நீங்கி, இவர்கள் உமக்குள் புது ஜீவனை அடையும்படி கிருபை தாரும். இவர்கள் சகோதர சிநேகிதத்தில் நிலைத்திருக்கும்படி, உமது அன்பினால் இவர்களை நிரப்பியருள வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மன்றாடுகிறோம். **ஆமேன்.**

4. பராபரனே; இந்த நாட்டிலும் விசேஷமாய் இந்த ஊரிலும் ஞானஸ்நானத்திற்கென்று ஆயத்தப்படுகிற யாவரையும் கருணையாய்க் கண்ணோக்கியருளும். அவர்களுக்கு இரங்கி, அவர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்தியருளும். விக்கிரக வணக்கத்தையும் வீண் பக்தியையும் அவர்களுடைய இருதயத்தினின்று முற்றிலுமாய் அகற்றியருளும். அவர்கள் உமது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி, உமது கிருபையினால் அவர்களைக் காத்தருளும். அவர்களுக்குப் போதிக்கப்படும் உமது திரு வசனத்தை மேன்மேலும் அறிந்துகொள்ளவும், அதில் நிலைத்திருக்கவும் கிருபை புரியும். அவர்கள் பழைய மனிதனைக் களைந்து, உமக்குள் மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமாகும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தேவரீர் அனுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று மனத் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் நம்மனைவரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. **ஆமேன்.**

Printed at the Hilal Press, Tirunelveli.—8-'41.

பரி. நற்கருணை ஆயத்த ஆராதனை.

கீர்த்தனம்.

மாலை ஜெபம் முன் வாசிக்கப்படாதிருந்தால் குருவானவர் சொல்வதாவது:

ஜெபம்பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. **ஆமென்.**

மாலை ஜெபம் முன் வாசிக்கப்பட்டிருந்தால், இந்த ஜெபத்தைச் சொல்லி ஆயத்த ஆராதனையைத் தொடங்கவேண்டும்.

ஜெபம்.

எங்கள் பரமபிதாவே, உமது நேசகுமாரனுடைய திருச் சரீரமும் இரத்தமுமாகிய திவ்விய சாக்கிரமெந்தை நாங்கள் ஏற்றபிரகாரமாய் வாங்கி உட்கொள்ள உமது பரிசுத்த ஆவியானவரால் எங்களை ஆயத்தப்படுத்தியருளவேண்டுமென்று தேவரீரைத் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

எல்லாரும் எழுந்து நிற்க. பின்வரும் வேதவசனங்களை மாறி மாறிச் சொல்லலாம் அல்லது பொருத்தமான வேதபாடம் ஒன்றை வாசிக்கலாம்

குரு: ஜீவ அப்பம் நானே. என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்.

மறு: என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.

குரு: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாமிசத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவன் இல்லை.

மறு: என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தில் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு.

குரு: நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா?

மறு: நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா ?

குரு: அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால்,

மறு: அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாய் இருக்கிறோம்.

குரு: எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ,

மறு: அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.

குரு: என் மாமிசம் மெய்யான போஜனமாயிருக்கிறது.

மறு: என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.

குரு : நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம்,

மறு : கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

இன்னும் நின்றுகொண்டிருக்க எல்லாரும் சேர்ந்து சொல்லுவது:

தேவரீர் வருமளவும் நாங்கள் உம்மை நினைவுகூரவும், உம்முடைய மரணத்தைத் தெரிவிக்கவும், உமது திருச் சரீரத்தையும், இரத்தத்தையும் எங்களுக்கு ஞான ஆகாரமாக அருளிச்செய்த இயேசுவே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழுகிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம். ஆமென்.

(எல்லாரும் உட்கார)

பிரசங்கம்

பரி. நற்கருணை ஆராதனையில் வரும் முதல் பிரசங்கத்தையாவது மூன்றும் பிரசங்கத்தையாவது, பின்வரும் சுருக்கத்தையாவது வாசித்து விளக்கிக் காட்டலாம். அல்லது சமயோஜித பிரசங்கம் செய்து ஜனங்களைத் தற்பரிசோதனைக்கு ஏவி எழுப்பலாம்.

பிரியமானவர்களே, கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்கள். அது நல்ல எண்ணமே. ஆனால், இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்துக்கு ஆயத்தமில்லாமல் எவரும் வரலாகாது. நம்மை நாமே சோதித்து ஆராய்ந்து பாத்திரமாய்ப் பெற்றுக்கொள்ளும்போது அனந்த நன்மைகளை அடைகிறோம். அபாத்திரமாய்ச் சேர்ந்தால் நம்மை நாமே ஆக்கினைக்குட்படுத்திக்கொள்ளுகிறோம். ஆகையால், இத்திருப் பந்தியில் பங்கு பெறுவதற்கு நம்மை எவ்வாறு ஆயத்தப்படுத்தலாம் என்பதைச் சிந்திப்போமாக.

முதலாவது : கடவுள் நமக்குப் பாராட்டிவரும் சகல நன்மைகளுக்காகவும் நாம் மெய்யான நன்றியறிதல் உள்ளவர்களாயிருப்பது நமது கடமை. அந்தகாரத்திலும் மரண இருளிலுமிருந்த நமக்காக மரிக்கும்படி தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைத்

தர்தருளினர். அவர் தம்முடைய மரணத்தினலே நமது பாவங்களைத் தொலைத்து நம்மைத் தேவ புத்திரராக்கி நித்திய ஜீவனை அருளிச் செய்திருக்கிருர். மேலும், நாம் அவரை என்றும் நினைவு கூரும்படி இத்திவ்விய நியமத்தை ஞாபகார்த்தமாக ஏற்படுத்தியும் இருக்கிருர். இதன்மூலமாய் நமது பேரிலுள்ள தமது அன்பை அவர் நிச்சயப்படுத்தி, நமக்குள்ளே அவர் வாசம் செய்கிருரென்னும் சத்தியத்தை நமக்கு நினைப்பூட்டி வருகிருர். ஆகையால், நாம் அன்போடும் நன்றியறிதலோடும் இந்தத் திருப்பந்தியில் சேரவேண்டும்.

இரண்டாவது: நமது பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்படுவோமாக. கடவுளுக்கு விரோதமாய் நாம் செய்திருக்கும் பாவங்கள் எத்தனை அனந்தம். பிறருக்கு நாம் செய்திருக்கும் அநியாயங்கள் கொஞ்சமல்ல. கடவுளுடைய பந்தியில் நாம் சேரத் துணியும் முன், நாம் செய்த பாவங்களுக்காகவும் அநியாயங்களுக்காகவும் உத்தமமாய் மனஸ்தாபப்பட்டு அவைகளெல்லாவற்றிற்காகவும் நம்மால் ஆனமட்டும் பரிகாரம் செய்வது நமது கடமை.

மூன்ருவது: எல்லா மனிதரோடும் அன்பும் சமாதானமுமுள்ளவர்களாய் இருக்கிரோமா என நம்மைப் பரீக்ஷிப்போமாக. ஏனெனில், நம்மில் அன்பு இல்லையானல், தேவனுடைய சபையில் நமக்குண்டான அந்நியோந்நிய ஐக்கியத்தை நாம் இழந்துவிடுவோம். மற்றவர்கள் நமக்கு அநியாயஞ் செய்திருந்தால் நாம் அவர்களுக்கு மனப்பூர்வமாய் மன்னித்து, அவர்களுக்கு நன்மை செய்து, இவ்விதமாய் மற்றவர்கள் பேரிலுள்ள நமது அன்பை விளங்கச்செய்வது அவசியம்.

நாலாவது: சகல பாவங்களையும் வெறுத்து, வணக்கத்தோடும் தாழ்மையோடும் கிறிஸ்துநாதரைப் பின்பற்றி நடந்துவருவது நம் கடமை.

ஆகையால், சகோதரரே, மேற்கூறியவைகளை மனதில் கொண்டவர்களாய் நம்மை நாமே பரிசோதித்து ஆராய்ந்து அறிவது இந்தப் பரிசுத்த நற்கருணைக்குத் தகுந்த ஆயத்தமாகும்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, சுத்த இருதயமுள்ளவர்களிடத்தில் வசிக்க விரும்பி எவ்விதப் பாவக் கறையையும் வெறுக்கிறீர். நாங்கள் எங்கள் ஆத்துமாவைப் பரிசோதிக்க இப்பொழுது உதவி புரிந்து, உமது பரிசுத்த ஆவியை எங்களிடத்தில் அனுப்பியருளும். நாங்கள் செய்த குற்றங்களை எங்களுக்குக் காண்பித்து, அவற்றை ஏற்றவாறு உணர்ந்துகொள்ளவும், உத்தமமாய் மனஸ்தாபப்படவும், வருங்காலத்தில் அவ்விதமாய்ச் செய்யாதிருக்கவும் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்கு உமது பரம கிருபையைக் கட்டளையிட்டருளும். **ஆமென்.**

தற்பரிசோதனைக் கேள்விகள்.

ஒவ்வொரு கேள்விக்கும் பின்னால் சற்றுநேரம் அமைதியாயிருந்து தற்பரிசோதனை செய்யவும்

1. கடவுளை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொண்டு வருகிறேனா ?

2. தேவன் கிறிஸ்துவின் மூலமாய் அருளிய இரக்கத்தில் உயிருள்ள விசுவாசம்வைத்து அவருடைய மரணத்தை நன்றியறிதலோடு நினைவுகூருகிறேனா ?

3. என் சத்துருக்களைச் சிநேகித்து, என்னைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து, என்னைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்து வருகிறேனா ?

4. எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு மனப்பூர்வமாய் மன்னித்து வருகிறேனா ?

5. அசுத்தமான நினைவுகளை நான் என் மனதில் பேணுகிறேனா ?

6. யாவரோடும் சமாதானமாயிருக்கிறேனா ?

7. சோம்பலுக்கு இடங்கொடுத்து, என் நேரத்தை வீணாய்க் கழித்து வருகிறேனா?

8. வீண்வார்த்தைகளைப் பேசி பிறரை நிந்திக்கிறேனா?

9. ஆலய ஆராதனை, ஓய்வுநாள் ஆசரிப்பு, வேதவாசிப்பு, பரி. நற்கருணை முதலிய திருச்சபை நியமங்களைக் கிரமமாய்க் கைக்கொண்டு வருகிறேனா?

10. என் ஜீவியத்தினாலும், வார்த்தையினாலும் கிறிஸ்துவைப் பற்றி சாட்சி பகர்ந்து வருகிறேனா?

11. ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும், அநாதைகளுக்கும் இரக்கம் பாராட்டி வருகிறேனா?

12. வியாதியஸ்தருக்காகவும், பிறருக்காகவும் ஜெபித்து வருகிறேனா?

13. வழி தவறினவர்களைத் தேடி நல்வழியில் திருப்பப் பிரயாசப்பட்டு வருகிறேனா?

14. சகலவிதமான பொல்லாப்பையும் துர்க்குணத்தையும் விலக்கி, என்னைச் சுத்தமுள்ளவனாய்க் காத்துக் கொள்ளக் கவனமாயிருக்கிறேனா?

மேற்கூறிய கேள்விகளுக்குப் பதிலாகப் பத்துக் கற்பனைகளையாவது கிறிஸ்துவின் பாக்கிய மொழிகளையாவது ஆவியின் கனிகளைப்பற்றிய வாக்கியத்தையாவது, அவற்றிற்கு அனுசாரமான கேள்விகளோடு உபயோகிக்கலாம்.

எல்லாரும் எழுந்துநின்று ஒரு கீர்த்தனம் பாடலாம்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

அன்புள்ள இரட்சகரே, உமது சிலுவைப்பாடுகளையும், மரணத்தையும் நாங்கள் என்றும் நினைவுகூரும்படி தேவரீர் பரிசுத்த நற்கருணையை நியமித்ததற்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறோம். இப்பந்தியில் சேரவிரும்பும் நாங்கள் யாவரும் தகுந்த ஆயத்தத்தோடும், பயபக்தியோடும் உம்மிடம் சேரக்கிருபைபுரிந்து, உமது திருச்சரீரமும், இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தால் எங்களைப் போஷித்துப்

பலப்படுத்தியருளும். நாங்களனைவரும் சகோதர ஐக்கியத்திலும் அன்பிலும் வாழ்ந்து, பிதாவோடு ஐக்கியமாயிருக்கிற தேவரீரில் எப்பொழுதும் நிலைத்திருக்கும்படி அருள் புரியவேண்டுமென்று மனத் தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

பராபரனே, உம்மாலேயன்றி நாங்கள் உமக்குப் பிரியமாய் நடக்கத் திராணியற்றவர்களாயிருக்கிறபடியினால், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எல்லாக் காரியங்களிலேயும் உம்முடைய பரிசுத்த ஆவி எங்கள் இருதயத்தை நடத்தி ஆண்டுகொள்ளும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். **ஆமேன்.**

கிறிஸ்துவே, எப்பொழுது விடியுமென்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப்போல நீர் எப்பொழுது தோன்றுவீர் என்று உமக்குக் காத்திருக்கிறோம். வைகறையில் அருணோதயம் போலத் தோன்றி அப்பத்தைப் பிட்கையில் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தியருளும். என்றென்றைக்கும் சதா காலங்களிலும் நீரே எங்களுக்குத் தேவனாயிருக்கிறீர். **ஆமேன்.**

ஆசீர்வாதம்.

தேவனுடைய இரக்கமுள்ள கிருபைக்கும் பராமரிப்புக்கும் உங்களை ஒப்புவிக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்துக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணி உங்கள்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரசன்னமாக்கி, இப்பொழுதும் எப்பொழுதும் உங்களுக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். **ஆமேன்.**

Printed at the Hilal Press, Tirunelveli.—S-'41.

மத்தியான ஜெபம்

¶ எல்லாரும் முழங்காற்படியிட்டிருக்க ஆராதனை நடத்துகிறவர் சொல்லுவதாவது:

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்.

மறு: ஆண்டவரே, எங்களுக்குச் சகாயம் பண்ணத் தீவிரியும்.
வெளுக்குந் திசையில் கர்த்தரைத் துதியுங்கள்.

மறு: கர்த்தருடைய நாமத்தைச் சமுத்திரத்தின் தீவுகளிலும் மகிமைப் படுத்துங்கள்.

நீதிமானுக்கு மகிமை என்று பாடும் கீதங்களை

மறு: பூமியின் கடையாந்தரத்திலிருந்து கேட்கிறோம்.

¶ எல்லாரும் எழுந்து நிற்கப் பின்வரும் சங்கீதங்களில் ஒன்றை வாசிக்கலாம்.

ஞாயிறு.	...	34 : 1–10	அல்லது	119 : 1— 32
திங்கள்.	...	96	,,	119 : 33— 56
செவ்வாய்.	...	97	,,	119 : 57— 80
புதன்.	...	98	,,	119 : 81—104
வியாழன்.	...	24	,,	119 : 105—128
வெள்ளி.	...	130	,,	119 : 129—152
சனி.	...	67	,,	119 : 153—176

அதன்பின் பாடம் வாசிக்கப்படும்

விசேஷித்த பாடம் இல்லாவிட்டால் பின் வருவனவற்றில் ஒன்றை வாசிக்கலாம்.

ஞாயிறு.	அப்போஸ்தலர்.	2 : 1— 4.
திங்கள்.	ஆதியாகமம்.	12 : 1— 2.
செவ்வாய்.	மத்தேயு.	9 : 35—38.
புதன்.	ஏசாயா.	60 : 1— 3.
வியாழன்.	அப்போஸ்தலர்.	1 : 7— 9.
வெள்ளி.	யோவான்.	10 : 14—16.
சனி.	மத்தேயு.	28 : 16—20.

தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்திரும்.

மறு : உமது மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருப்பதாக.

தேவனே, நீர் சிருஷ்டித்த ஜாதிகள் எல்லாரும் வந்து உம்மை வணங்குவார்கள்.

மறு : உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள்.

கீதம்

¶ அட்வெந்து நாட்களில் உபயோகிக்கக்கூடிய கீதத்தை 9-ம் பக்கத்தில் காண்க,

தினந்தோறும் வாசிக்கவேண்டிய ஜெபம்

ஜெபம்பண்ணக்கடவோம்

கர்த்தராகிய ஆண்டவரே, மிகுந்த கிருபையுள்ள இயேசுவே, நாங்கள் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படி, மத்தியான வேளையில் எங்கள் பாவங்களை உமது சரீரத்தில் சிலுவையின் மேல் சுமந்தவரே, இந்தச் சமயத்திலும் எங்கள் மரண நேரத்திலும் தேவரீர் எங்களுக்கு இரங்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். உமது அடியாராகிய நாங்களும், உமது திருப்பாடுகளைப் பக்தி விநயமாய்த் தியானிக்கும் மற்றக் கிறிஸ்தவர்கள் யாவரும், இம்மையில் தேவ பக்தியும் சமாதானமுமாய் ஜீவியஞ் செய்யவும், மறுமையில் உமது இரக்கத்தால் நித்திய மகிமையைப் பெற்றுக்கொள்ளவும் கிருபை செய்தருளும். பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் சதா காலமும் ஜீவித்து அரசாளுகிற தேவரீருக்கே மகிமை உண்டாவதாக. ஆமேன்.

ஞாயிறு—அந்தந்த நாளுக்குரிய சுருக்க ஜெபம்

திங்கள். துதிக்கப்படத்தக்க ஆண்டவரே, மனுகுலத்தை இரட்சிக்கும்படி உமது சொந்த ஜீவனைக் கொடுத்தவரே, உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் உம்மை நல்ல மேய்ப்பராக ஏற்றுக் கொண்டு, மனமாறுதலோடும் சந்தோஷத்தோடும் உம்மிடத்தில் திரும்பி உமது மந்தையைச் சேரும்படி கிருபை செய்தருளவேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் சதாகாலமும் ஒரே தேவனாக ஜீவித்து அரசாளுகிற தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

செவ்வாய். இரக்கமுள்ள பிதாவாகிய தேவனே, அப்போஸ்தலனாகிய பரிசுத்த பேதுருவுக்கு மூன்று தரிசனங்களினால் உமது அளவற்ற காருண்யத்தை வெளிப்படுத்தினவரே, எல்லா மானிடரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் ஆவலாய் விரும்பவும், உமது ராஜ்யத்தின் விருத்திக்கென்று உற்சாகமாய் உழைக்கவும், தேவரீர் எங்கள் அவிசுவாசத்தை மன்னித்து, எங்கள் இருதயத்தை விசாலமாக்கி, எங்களில் அனல் மூட்டியருள வேண்டுமென்று, லோகத்தின் இரட்சிப்புக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்த உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஆமேன்.

புதன். புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாகும்படி மத்தியான நேரத்தில் உமது அடியானாகிய பவுலை அழைத்தருளின கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் உமது மாட்சிமையின் ஒளியால் உலகத்தைப் பிரகாசிப்பிக்கவும், உமது திருநாமத்தினிமித்தம் உமது சபை செய்யவேண்டிய கிரியைகளையும் அனுபவிக்கவேண்டிய பாடுகளையும் உமது பரிசுத்த ஆவியின் மூலமாய் வெளிப்படுத்தவும் வேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக சதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஆமேன்.

வியாழன். உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கின இயேசு கிறிஸ்துவே, தேவரீர் திருச்சபையின் மேல்

பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதங்களை நிறைவாய்ப் பொழிந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், போதகர். மேய்ப்பர் முதலானவர்களைத் தேவரீர் ஆதிகாலத்தில் அனுப்பினதுபோல, இக்காலத்திலும் சகல தேசங்களுக்கும் ஜாதிகளுக்கும் அவர்களை அனுப்பி, உமது ஜனங்களை ஒரே சபையாகவும் மந்தையாகவும் சேர்த்தருளவேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாகச் சதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

வெள்ளி: உலகத்தை மீட்டுக்கொள்ளும்படி சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசு கிறிஸ்துவே, எல்லாருக்கும் ஜீவனை அளிக்கிறவரே, நாங்கள் வார்த்தையினாலும் கிரியையினாலும் உமது மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் உண்மையுள்ள சாட்சிகளாயிருக்கும்படி கிருபைசெய்தருள வேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக சதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற தேவரீரைக் கேட்டுக் கொள்ளுகிறோம். ஆமேன்.

சனி. உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவே, உம்மை அறியாதவர்களையும், உம்மை மறந்தவர்களையும், அஞ்ஞான இருளிலும் மரண நிழலிலும் அலைகிறவர்களையும் திருச்சபைப் பணிவிடையின்றி தூர தேசங்களில் சஞ்சரிக்கிறவர்களையும் தேவரீர் கருணையாய் கண்ணோக்கி, உமது இரட்சணியத்தின் சகாயத்தை அவர்களுக்குக் கட்டளையிட்டருளும். சமுத்திரத்தில் தண்ணீர் நிறைந்திருக்கிறது போல், உமது மகிமையை அறியும் அறிவு பூமியில் நிறைந்திருக்கும்படி, உமது ராஜ்யத்தைப் பூரணப்படுத்த வல்லமையாய் எழுந்தருளும். எங்கள் கன்மலையும் எங்கள் மீட்பருமாகிய கர்த்தாவே, நாமகள் செய்துகொண்டிருக்கிற இந்த விண்ணப்பங்களைத் தேவரீர் தயவாக அங்கீகரித்தருளும்படி தாழ்மையோடே வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமேன்.

விசேஷித்த ஸ்தோத்திரங்கள்.

ஒவ்வொரு ஸ்தோத்திரத்திற்குப் பின்னும் சொல்லவேண்டியது.

கர்த்தரை ஸ்தோத்திரிப்போமாக.

மறு. தேவரீருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

விசேஷித்த ஜெபங்கள்.

¶ ஒவ்வொரு விண்ணப்பத்திற்குப் பின்னும் சொல்லவேண்டியது.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு. எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேர்வதாக.

இவைகளுக்குப்பின் கீழ்க்கண்ட ஜெபங்களில் சிலவற்றை வாசிக்கலாம்:

1. கலாசாலைகளுக்காகவும், பள்ளிக்கூடங்களுக்காகவும்.

உமது குமாரன் மூலமாய் மனிதருக்கு வழியையும் சத்தியத்தையும் ஜீவனையும் வெளிப்படுத்தின கடவுளே, கிறிஸ்தவ கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் செய்யப்படும் எல்லா ஊழியங்களையும் ஆசீர்வதித்து, அவற்றில் உமது சுவிசேஷம் வல்லமையாய்ப் பிரசித்தஞ் செய்யப்படவும், பயிற்சி பெறுகிறவர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து உமது குமாரனை உலக இரட்சகராக அறிந்து கொள்ளவும், மனிதருக்கு முன் அவரைத் தைரியமாய் அறிக்கையிடவும் கிருபை செய்தருள வேண்டுமென்று தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

2. திவ்விய பணிவிடைக்காரருக்காக.

கடவுளே, சர்வ வல்லமையுள்ளவரே, ஞான சமுத்திரமே, மனுப்புத்திரரை உமது ஞானத்தால் ஆச்சரியமாய் நடத்துகிறவரே, உமது திருச்சபையில் பணிவிடை செய்யும்படி தேவரீர் அழைத்த யாவரையும் உமது ஆவியின் வரப்பிரசாதங்களால் நிரப்பியருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர்கள் அதிக சந்தோஷத்தோடே அவரைச் சந்திக்கப் புறப்படும்படி, உமது பரிசுத்த ஸ்தலத்தில் குற்றமில்லாதவர்களாய் நிற்கவும், உமது ராஜ்யத்தைப்பற்றிய சுவிசேஷத்தை அறிவிக்கவும், உமது சத்திய வசனத்தைப் பகிர்ந்து கொடுக்கவும், உமக்கு உகந்த ஆவிக்குரிய காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தவும், மறு ஜென்ம முழுக்கால் உமது ஜனங்களைப் புதுப்பிக்கவும் அவர்களுக்கு கிருபை தந்தருள உமது மாட்சிமையான திருநாமத்தை முன்னிட்டுத் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

3. திருச்சபை பரிசுத்தப்படுவதற்காக

பரிசுத்த பிதாவே, இரட்சகரின் திருப்பாடுகளால் மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள் அவரை விட்டுப் பாவ வழியில் அலையாதபடி, உமது வாசஸ்தலமாகிய சபையை பாவமறச் சுத்திகரித்துப் பூரணப்படுத்தியருளவேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

4. அஞ்ஞான இருள் நீங்க

ஆண்டவராகிய பராபரனே, உமது பிள்ளைகளின் மரணத்தை விரும்பாத நேசரே, உலகத்தில் அக்கிரமக்காரன் உயர்த்தப் படாதபடி, அந்தகாரமும் கொடுமையுமுள்ள குடியிருப்புகள் நிறைந்த நாடுகளைக் கண்ணோக்கி, ஒடுக்குகிறவனுடைய பலத்தைத் தகர்த்து, விக்கிரக வணக்கம், பில்லிசூனியம், வறுமை, அறிவீனம், அடிமைத்தனம், பயம் முதலானவற்றை அகற்றி, உலகத்தை மீட்டுக்கொண்ட உமதுபரம அன்பை உம்மை அறியாதவர்களுக்கு வெளிப்படுத்தியருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடே கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமேன்.

5. கஷ்டம் நீங்கினதற்காகச் செய்யப்படும் ஸ்தோத்திரம்

ஆண்டவரே, தேவரீர் உமது மந்தையாகிய எங்களைக் கண்ணோக்கி, கஷ்ட காலத்தில் நாங்கள் செய்த விண்ணப்பங்களைத் தயவாக ஏற்றுக்கொண்டதுபோல, இப்பொழுது நாங்கள் சொல்லுகிற ஸ்தோத்திரப் பலிகளையும் அங்கீகரித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

6. பரி. நற்கருணைக்கு ஆயத்த ஜெபம்

கிறிஸ்துவே, எப்பொழுது விடியுமென்று அருணோதயத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் போல், நீர் எப்பொழுது தோன்றுவீரென்று உமக்குக் காத்திருக்கிறோம். வைகறையில் அருணோதயம் போலத் தோன்றி, அப்பத்தைப் பிட்கையில் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தியருளும். என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் நீரே எங்களுக்குத் தேவனாயிருக்கிறீர். ஆமேன்.

7. பரி. நற்கருணைக்குப் பின்

ஆண்டவரே, ஆத்ம இரட்சகரே, மகிமையின் மேல் மகிமை அடைந்து உம்மைப் போற்றுகிறோம். எங்கள் ஆண்டவராகிய தேவனே, நாங்கள் உமது பலத்தின்மேல் பலமடைந்து, பரிசுத்த ஸ்தலத்தில் செய்யவேண்டிய பணிவிடையை நிறைவேற்றி, தேவரீர் உமது கருணையின் பரிபூரணத்தை எங்களுக்கு அருளவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். நல்வழியில் எங்களை நடத்தும். உமக்குப் பயப்படும் பயத்தில் எங்களை நிலைநிறுத்தும். எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உமது பரம ராஜ்யத்தை எங்களுக்கு அனுக்கிரகஞ் செய்தருளும். ஆமேன்.

அல்லது

எங்களுக்காக மரணமடையும்படி உமது குமாரனைத் தந்தருளின சர்வ வல்லமையுள்ள தேவனே, இன்றையத்தினம் அவரது விலையேறப்பெற்ற சரீரமும் இரத்தமுமாகிய ஐக்கியத்தில் பங்கு பெற்றிருக்கிற நாங்கள், மறுமையில் உம்மோடு ஒழியாத ஐக்கியத்தை அனுபவிக்கும்படி, முன்செய்த பாவங்களற நாங்கள் கழுவப்படவும், அவரது பரிசுத்த ஜீவியத்தின் அடிச்சுவடுகளைப் பின்தொடரவும் எங்களுக்கு அருள்புரியவேண்டுமென்று, எங்களை நேசித்து எங்களுக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்த இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

8. திடப்படுத்தல் பெறப்போகிறவர்களுக்காக

பரிசுத்த ஆவியானவரே, விரைவாய் வந்து நீர் மறுஜன்மத்தால் புதுப்பித்திருக்கிற அடியாரின் இருதயங்களில் உமது திவ்விய கிரியையைப் பூரணப்படுத்தியருளும். கர்த்தாவே, ஜீவனைக் கொடுக்கிறவரே, நீர் அவைகளை உமது வாசஸ்தலமாகக்கொண்டு நித்திய காலமாய் அவர்களோடு இருக்கும்படியாக, அவர்கள் தங்கள் இருதயத்தைத் திறந்து வைத்து உம்மை ஏற்றுக்கொள்ளக் கிருபை தந்தருளும். ஆமேன்.

9. ஜெபத்தியான நாளுக்காக.

வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியால், உமது சீஷரை நோக்கி வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்களென்று திருவுளம்பற்றின இயேசுகிறிஸ்துவே, இங்கே கூடியிருக்கிற உமது அடியார் உம்மோடு இளைப்பாறும்படி கிருபை செய்தருளும். அவர்களின் ஆத்துமா வாஞ்சிக்கிற உம்மைக் கண்டடையவும் உம்மால் கண்டடையப்படவும், ஏற்றவாறு உம்மை நாடும்படி அருள்புரியும். பேசப்படும் வார்த்தைகள் வீணாய்ப்போகாமல், வனாந்தரத்தில் பிரயாணஞ் செய்கிற எங்களை உற்சாகப்படுத்தத்தக்க திவ்விய வார்த்தைகளாயிருக்கும்படி, உமது நாமத்தை முன்னிட்டுப் பேசுகிறவர்களுக்கு விசேஷித்த அன்பையும் ஞானத்தையும் கட்டளையிட்டருள வேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாகச் சதாகாலமும் ஜீவித்தரசாளுகிற தேவரீரைக் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

10. குருமார் ஆவிக்குரிய கூட்டத்தில் சொல்லிய ஜெபம்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, உமக்கு முன் ஆசாரியராக நிற்கும்படி அழைக்கப்பட்டிருக்கிற நாங்கள் பரிசுத்தமும் பக்தியும் தூய்மையும் உள்ளவர்களாக உம்மைச் சேவிக்கும்படி கிருபை தாரும். இதுவரைக்கும் நாங்கள் ஏற்றவாறு உமக்கென்று பணிவிடை செய்யாதிருந்தும், இந்த நாட்களிலாவது உண்மையாய் மனஸ்தாபப்படவும் மனத்தாழ்மையும் நல்விருப்பமும் நிறைந்தவர்களாய் நல்ல தீர்மானங்களைச் செய்யவும், வருங்காலத்தில் அதிக உற்சாகத்தோடே உம்மைச் சேவிக்கவும், தேவரீர் எங்களுக்கு இரக்கம் பாராட்டி எங்களைப் பலப்படுத்தியருள வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

11. பிரயாணஞ் செய்பவருக்காக.

நித்திய பிதாவின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே, உமது அப்போஸ்தலர் பிரயாணஞ் செய்யும்பொழுது அவர்களை நடத்திக் காப்பாற்றினவரே, ஆவியில் பிரியாமல் சரீரப் பிரகாரமாய் எங்களை

விட்டுப் பிரயாணமாய்ப் போயிருக்கிற உமது அடியாரைக் கண்ணோக்கி, அவர்கள் போகிற வழியில் அவர்களைக் காப்பாற்றியருளும். அவர்கள் போக விரும்புகிற இடத்தில் சேதமின்றிச் சேர்ந்து, தேவரீர் கற்பித்தவைகளை அவர்கள் சந்தோஷமாய் நிறைவேற்றவும், நீர் வாக்கருளிய நன்மைகளைப் பெற்று அனுபவிக்கவும் கிருபைசெய்தருள வேண்டுமென்று உம்மைத் தாழ்மையாய் பிரார்த்திக்கிறோம். ஆமேன்.

அதன்பின் சொல்லவேண்டியது :

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே. உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமேன்.

கர்த்தர் உங்களோடு இருப்பாராக.

அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

கர்த்தரை ஸ்தோத்திரிப்போமாக.

தேவரீருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவன் இப்பொழுதும் எப்பொழுதும் நம்மைக் காப்பாற்றி ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அட்வேந்து நாட்களில் சொல்ல அல்லது பாடவேண்டிய லித்தானியா.

பரம ஞானமே, உன்னதமானவரிடத்திலிருந்து புறப்பட்டு பூமியின் ஒரு கோடி முதல் மறு கோடி பரியந்தம் எட்டி எல்லாவற்றையும் தயவாயும் வல்லமையாயும் நடத்துகிறவரே,

மறு. ஞானத்தின் வழியை எங்களுக்குப் போதிக்க வந்தருளும்.

அதோனாய், இஸ்ரவேல் ஜனத்தை நடத்தினவரே, எரிகிற முட்செடியின் ஜுவாலையில் காணப்பட்டு, சீனாய் மலையில் நியாயப் பிரமாணத்தை அருளினவரே,

மறு. உமது கரத்தை நீட்டி எங்களை இரட்சிக்க வந்தருளும்.

ஈசாய் என்னும் அடிமரமே, ஜனங்களுக்குக் கொடியாக நிலை நிறுத்தப்பட்டவரே, உமது நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள், சகல ஜாதியாரும் உம்மை நோக்கி மன்றாடுவார்கள்.

மறு. இப்பொழுதே எங்களை இரட்சிக்க வந்தருளும், தாமதியாதேயும்.

தாவீதின் திறவுகோலே, இஸ்ரவேல் வீட்டாரின் செங்கோலே, ஒருவரும் பூட்டாதபடி திறக்கிறவரே, ஒருவரும் திறவாதபடி பூட்டுகிறவரே,

மறு. இருளிலும் மரண நிழலிலும் குடியிருக்கிறவர்களையும் சிறைப்பட்டவர்களையும் விடுவிக்கும்படி எழுந்தருளும்.

அருணோதயமே, நித்திய ஜோதியின் பிரகாசமே, நீதியின் சூரியனே,

மறு. இருளிலும் மரண நிழலிலும் குடியிருக்கிறவர்களைப் பிரகாசிப்பிக்க எழுந்தருளும்.

புறஜாதியாரின் ராஜாவே, புறஜாதியார் காண ஆசிக்கிறவரே, இருதிறத்தாரையும் ஒன்றாய்ச் சேர்க்கும் மூலைக்கல்லே,

மறு. பூமியின் மண்ணினால் நீர் உருவாக்கின மனுகுலத்தை இரட்சிக்கும்படி எழுந்தருளும்.

இம்மானுவேலே, எங்கள் ராஜாவே, புறஜாதியாரை ரட்சிக்கிறவரே, புறஜாதியாரால் வாஞ்சிக்கப்படுகிறவரே,

மறு. எங்களை இரட்சிக்க வந்தருளும்.

சுவிசேஷப் பிரபல்யத்துக்காக ஸ்தோத்திரம்.

¶ இதை ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விசேஷித்த சமயங்களிலும் உபயோகிக்கலாம.

ஆண்டவரே, வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறீர்.

உமது வசனம் எருசலேமிலும் அந்தியோகியாவிலும் அதேனே பட்டணத்திலும் ரோமாபுரியிலும் பிரசித்தமானதுமன்றி, எல்லா இடங்களிலும் கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசம் பரவியதற்காக உமது திருநாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக.

மறு: தேவரீருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

வெவ்வேறு காலங்களில்,

நியாயமாய்ப் போராடி முடிவு பரியந்தம் பின்வாங்காமல் நிலைத்திருந்த உமது நல்ல போர்வீரருக்காகவும்,

சாஸ்திரிகளின் ஞானத்திற்காகவும்,

சுவிசேஷகரின் நல் வைராக்கியத்திற்காகவும்,

தீர்க்கத்தரிசிகளின் வல்ல வசனங்களுக்காகவும்,

நல்ல மேய்ப்பர்களின் அன்புக்காகவும்,

பாலகர் செலுத்தியிருக்கிற துதிகளுக்காகவும்,

ஸ்திரீகள் செய்திருக்கிற பணிவிடைக்காகவும்,

இளைஞரின் தூய்மைக்காகவும்,

வயோதிகரின் பின்வாங்காத விசுவாசத்திற்காகவும்,

உமது பிரசன்னத்தின் அத்தாட்சிகளுக்காகவும்,

உமது சிலுவையின் அச்சடையாளங்களுக்காகவும்,

தேவரீருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

சகல தேசத்தாருக்கும் குலத்தாருக்கும் பாஷைக்காரருக்கும் ஜாதியாருக்கும் அனுப்பப்பட்டதும், எங்களுக்குள் பல்லாண்டாகப் பிரகாசித்ததுமான உமது நித்திய சுவிசேஷத்தின் வெளிச்சத்திற்காகவும்,

பாதாளத்தின் வாசல் மேற்கொள்ளாத சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிற உமது திருச்சபைக்காகவும்,

ஞானவான்கள் ஆகாயமண்டல ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும், என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்களென்று தேவரீர் அருளிய நல்ல வாக்குத்தத்தத்திற்காகவும்,

மறு: தேவரீருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும்
நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்.
கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்,

அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலும் உள்ளது.

கர்த்தாவே, உம்முடைய கிரியைகள் எல்லாம் உம்மைத் துதிக்கும்,
உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்.
மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும்,
உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப் பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு,
உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து,
உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள்.
உம்முடைய ராஜ்யம் சதா காலங்களிலுமுள்ள ராஜ்யம்,
உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது.

மறு: தேவரீருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே,
தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்.

பரிசுத்தவான்களின் ராஜாவே,
தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.

கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும்,
உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்?

தேவரீர் ஒருவரே பரிசுத்தர்.

எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்.

உமது நீதியான செயல்கள் வெளியரங்கமாயின.

மறு: தேவரீருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

இவைகளுக்குப் பின்பு நான் பார்த்தபோது,

இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும்,

ஒருவரும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்,

வெள்ளை அங்கிகளைத் தரித்து,
தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து,

சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்.

அவர்கள் மகா சத்தமிட்டு,

இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

அல்லேலூயா!

மறு: சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக,

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக: ஆமென்.

Printed at the Hilal Press. Tirunelveli—5-'41.

இரவு ஜெபம்.

(எல்லாரும் முழங்காற்படியிட்டிருக்க)

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமேன்.

தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்.

மறு: ஆண்டவரே, எங்களுக்குச் சகாயம் பண்ணத் தீவிரியும்.

எல்லாரும் எழுந்து நிற்க.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமேன்.

எல்லாரும் சேர்ந்து சொல்லவேண்டிய கீதமாவது:

நித்திய பிதாவின் திருமாட்சிமையினின்று புறப்படும் ஆனந்த ஜோதியே, பரம்பொருளே, பரிசுத்தரே, எங்கள் திருநாதராகிய இயேசுகிறிஸ்துவே.

சாயங்காலமாயிற்று, பொழுது போயிற்று; மாலை நேரத்தில் நாங்கள் வெளிச்சங் கண்டு, பிதாவையும் குமாரனையும் திவ்விய பரிசுத்த ஆவியையும் போற்றி மகிமைப்படுத்துகிறோம்.

ஜீவனைக் கொடுக்கிறவராகிய தேவ சுதனே, பக்தர் செலுத்தும் துதி எக்காலத்திலும் உமக்கு ஏற்கும்; ஆதலால் உலகம் அனைத்தோடுங் கூட தேவரீரை ஸ்தோத்திரிக்கிறோம்.

இதன் பின் கீதம் பாடலாம்.

பின்வரும் சங்கீதங்களில் ஒன்றேனும் வாசிக்கவேண்டும்.

4, 31 : 1—6, 91, 121, 134, 139 : 1—11

சனிக்கிழமை சங். 26. ஞாயிற்றுக்கிழமை சங். 111.

லெந்தென்னும் நாட்களில் வழங்கவேண்டிய சங்கீதங்கள் : 6, 32, 38, 51, 102, 110, 143.

பாடம்

விசேஷித்த பாடம் இல்லாதிருந்தால், பின் வரும் வாக்கியங்களில் ஒன்றை வாசிக்கவேண்டும்.

எரே. 14:9.

கர்த்தாவே, நீர் எங்கள் நடுவிலிருக்கிறவராமே; உம்முடைய நாமம் எங்களுக்குத் தரிக்கப்பட்டுமிருக்கிறதே; எங்களை விட்டுப் போகாதிரும்.

1 தீமோ. 1:17.

நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

மறு: தேவரீருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

சிமியோனின் கீதம்

ஆண்டவரே, உமது வார்த்தையின்படி: உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்.

புறஜாதிகளுக்கு: பிரகாசிக்கிற ஒளியாகவும்.

உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு: மகிமையாகவும்.

தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக: ஆயத்தம்பண்ணின உமது இரட்சணியத்தை என் கண்கள் கண்டது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

¶ எல்லாரும் சேர்ந்து சொல்வது:

ஆண்டவரே, நாங்கள் நித்திரை செய்யாத நேரத்தில் கிறிஸ்துவோடு விழித்திருக்கவும், நித்திரை செய்யும் நேரத்தில் அவருக்குள் சமாதானமாய் இளைப்பாறவும், நாங்கள் நித்திரை செய்யும்பொழுது எங்களைக் காப்பாற்றி, விழித்திருக்கும்பொழுது இரட்சித்தருளும்.

ஆமென்.

வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றும் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவ மன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

ஜெபம் பண்ணக்கடவோம்

ஆண்டவரே, உமது ஜனங்கள் உமக்குள் மகிழ்ந்திருக்கும்படி
மறு: எங்களை உயிர்ப்பித்து உம்மண்டை திருப்பியருளும்

பாவ அறிக்கை

(எல்லாரும் சேர்ந்து சொல்வது)

நாங்கள் நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியையினாலும் பாவஞ் செய்திருக்கிறோமென்று, பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய சர்வ வல்லமையுள்ள தேவனுக்கும், இங்கே இருக்கிற சகோதரருக்கும் கிறிஸ்துவின் திருச்சபை அனைத்துக்கும் அறிக்கையிடுகிறோம். குற்றவாளிகள் நாங்களே; உத்தரவாதிகள் நாங்களே; எங்கள் குற்றம் பெரிது. ஆதலால் தேவரீர் எங்களுக்கு இரங்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

(தற்சோதனைக்காகச் சற்றுநேரம் அமைதி)

சர்வ வல்லமையுள்ள தேவன் நமக்கு இரங்கி, நமது பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, நமக்கு நித்திய ஜீவனைத் தந்தருள்வாராக. ஆமென்.

குரு: சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள ஆண்டவர் உங்கள் பாவங்களையெல்லாம் மன்னித்து, உங்களுக்குப் பாவ நிவாரணத்தையும் விமோசனத்தையும் கட்டளையிட்டருளி, பச்சாதாபத்தையும், சீர்திருந்திய நடக்கையையும், தமது பரிசுத்த ஆவியின் கிருபையையும் தேற்றரவையும் தந்தருள்வாராக. ஆமென்.

பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவனைத் துதிப்போமாக.

மறு: என்றென்றைக்கும் அவரைப் புகழ்ந்து போற்றுவோம்.

ஆண்டவரே, பரலோக மாட்சிமையில் நீர் உன்னதமானவராயிருக்கிறீர்.

மறு: சதா காலங்களிலும் உமக்கே துதி ஏற்கும்.

ஆண்டவரே நாங்கள் பாவஞ்செய்யாதபடி,

மறு: இந்த இரவில் எங்களைக் காத்தருளும்.

கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறு: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேர்வதாக.

1. கர்த்தாவே, இந்த ஸ்தலத்தில் எழுந்தருளி, பிசாசின் தந்திரங்கள் அணுகாதபடி எங்களைக் காத்தருளும். உமது பரிசுத்த தூதர் இங்கே தங்கி, எங்களைச் சமாதானத்தோடே காப்பாற்றும்படி கட்டளையிட்டருளும். உமது ஆசீர்வாதம் என்றென்றைக்கும் எங்கள் மேல் இருப்பதாக. ஆமென்.

2. இரக்கமுள்ள கர்த்தாவே, எங்களுக்கு அருமையாயிருக்கிற யாவரையும் இந்த இரவில் உமது திவ்விய பராமரிப்புக்கு ஒப்புவிக்கிறோம். அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் கட்டளையிட்டு, சோதனை நேரத்தில் விடுவித்து, இம்மையில் அவர்கள் சஞ்சரிக்குமளவும் இடையூறின்றித் தற்காத்து, கடைசியில் உமது பரம ராஜ்யத்தில் சேர்த்தருளும். ஆமென்.

(ஞாயிற்றுக்கிழமை)

3. அந்தகார லோகத்தின் அதிபதிகளை வென்று புதிய எருசலேமில் எமக்களுக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தியிருக்கிற

கர்த்தாவே, இன்றையத்தினம் உமது உயிர்த்தெழுதலினிமித்தம் ஸ்தோத்திரம் செலுத்திய நாங்கள், தேவரீர் பிரகாசிப்பிக்கிற பரம நகரத்தில் உம்மை ஸ்தோத்தரிக்குமளவும் எங்களைக் காப்பாற்றியருள வேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம். **ஆமென்.**

(பின்வரும் பிரார்த்தனைகளில் ஒன்றேனும் வாசிக்கவேண்டும்.)

4. கர்த்தாவே, எங்கள் அந்தகாரம் நீங்க வெளிச்சம் தந்து; இந்த இராத்திரியில நேரிடும் சகல மோசங்களுக்கும் விக்கினங்களுக்கும், உமது மிகுந்த இரக்கத்தினால் எங்களை விலக்கிக் காக்கவேண்டுமென்று, உம்முடைய ஒரே குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின அன்பினிமித்தம் வேண்டிக் கொள்ளுகிறோம. **ஆமென்.**

5. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனே, இதைப்போன்ற ஓர் நேரத்தில் தேவரீர் கல்லறையில் நித்திரைசெய்ததால் மரித்துப்போகிற உமது விசுவாசிகளுக்கு நித்திய ஜீவனைப்பற்றிய நன்னம்பிக்கை உண்டாகச் செய்தருளினீரே; எங்கள் சரீரங்கள் பூமியின் தூளில் நித்திரை பண்ணும் பொழுது எங்கள் ஆத்துமாக்கள் உம்மிடத்தில் வாழும்படி, உமது பாடுகளுக்குக் காரணமாயிருந்த எங்கள் பாவங்களின் நிமித்தம் ஏற்றவாறு துக்கப்பட எங்களுக்குக் கிருபை தந்தருள வேண்டுமென்று பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

6. இரக்கமுள்ள தேவனே, நிலையற்ற இவ்வுலகத்தில் மாறி மாறி வருகிற சுகதுக்கங்களினால் இளைத்துப்போயிருக்கிற நாங்கள் நித்திய மாறாத தேவரீருக்குள் இளைப்பாறும்படி, இந்த இரவில் பிரசன்னமாகி, விடியுமளவும் உமது அடியாரைக் காத்தருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

7. வேலை செய்கிறவர்களுக்கு வலிமையையும், இளைப்பாறுகிறவர்களுக்கு நித்திரையையும் அருளுகிற கர்த்தராகிய பராபரனே, வைகறையில் நாங்கள் உமக்குத் துதி தோத்திரங்களைச் செலுத்தும்படியாக இந்த இரவில் பாவமற எங்களைக் காத்து, சாந்தியையும் அமைதியையும் எங்களுக்குக் கட்டளையிட்டருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமேன்.

அதன் பின் விசேஷித்த பிரார்த்தனைகள், ஸ்தோத்திரங்கள் யுக்தப்படி வாசிக்கலாம். அதன் பின்,

தினந்தோறும் வாசிக்கப்படும் பிரார்த்தனை.

களைப்படைந்த யாவருக்கும் களைப்பு நீங்க, உமது திவ்விய இரக்கத்தால் பூமியின்மேல் திரையைப்போல அந்தகாரத்தை விரித்திருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவே, இந்த இரவில் நாங்களும் எல்லா மானிடரும் உமக்குள் இளைப்பாறும்படி செய்யும். துக்கம், மனச்சஞ்சலம், உபத்திரவம் அடைந்திருக்கிற யாவரையும் உமது கிருபையினாலே தேற்றி ஆதரித்தருளும். எங்களையும் எங்கள் அருமையான இனத்தாரையும் நண்பரையும் அயல் வீட்டாரையும் உமது திருக்கரங்களில் ஒப்புவிக்கிறோம். விசுவாசிகளை ஸ்திரப்படுத்தியருளும். தீயோரை நல்வழிப்படுத்தி, நிர்விசாரிகளை உணர்வடையச் செய்து, பாவத்தில் அகப்பட்டவர்களை விடுவித்தருளும். வியாதியஸ்தரைக் குணமாக்கும். மரண அவஸ்தையிலுள்ளவர்களுக்குச் சமாதானத்தை அருளிச்செய்யும். எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் உமது திரு நாமம் மகிமைப்படும்படி, உமது சத்தியத்துக்கு விரோதமான யாவற்றையும் தேவரீர் அகற்றி, உலகத்தில் உமது திவ்ய ராஜ்யத்தை ஸ்தாபித்து அரசாட்சி செய்ய வேண்டுமென்று தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடைய வைகளே. **ஆமென்.**

கர்த்தர் உங்களோடு இருப்பாராக.

அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

கர்த்தரை ஸ்தோத்திரிப்போமாக.

கடவுளுக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

சர்வ வல்லமையுள்ள தேவன் இந்த இரவில் நமக்கு அமைதியையும் மரண நேரத்தில் பரிபூரண சமாதானத்தையும் கட்டளையிட்டருள்வாராக. ஆமென்.

சர்வ வல்லமையுள்ள தேவன் விசுவாசிகள் அனைவரோடுங்கூட நமக்குச் சாந்தியையும் இளைப்பாறுதலையும் கட்டளையிட்டருள்வாராக. ஆமென்.

விசேஷித்த பிரார்த்தனைகள்.

1. ஆச்சிரமத்தில் அல்லது கலாசாலையில் செய்யத்தக்கது.

நித்திய பராபரனே, இரக்கமுள்ள பிதாவே, நன்னம்பிக்கைக்குக் காரணரே, இந்தியாவிலுள்ள பற்பல ஜனங்களுக்கும் உமது ராஜ்யத்தைப்பற்றிய சுவிசேஷத்தை நாங்கள் அறிவிக்கும்படி எங்களை ஒரே

அந்நியோந்நியமாக இணைத்தருளினவரே, நாங்கள் எங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும் உமக்கு மாசற்ற பலியாக ஒப்புவிக்கும்படி உமது பரிசுத்த ஆவியினால் எங்களுக்கு ஒத்தாசை செய்யும். எங்கள் ஐக்கிய ஜீவியத்தின் பரிபூரணத்தினால் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிற குறைகள் யாவும் நீங்கவும், நாங்கள் எங்கள் கடமைகளை உத்தமமாய் நிறைவேற்றவும், பொறுமை, விசுவாசம், தைரியம், நன்னம்பிக்கை, அனுதாபம், அன்பு முதலிய சற்குணங்களை எங்களுக்கு அருளிச்செய்யும். எங்கள் பிரயாசங்களுக்கு ஏற்ற பலன் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும், தேவரீர் எங்களோடிருக்கிறீரென்று நாங்கள் அறிந்து மனமகிழும்படி, எங்கள் மனக் கண்களைத் திறந்து எங்களைப் பிரகாசிப்பித்தருள வேண்டுமென்று, உமது ஏக சுதனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

2. விசுவாச வளர்ச்சிக்காக.

எங்களுக்கு ஜீவனாகிய பராபரனே, பிதாவாகிய தேவரீருடைய பிரசன்னத்தை நாங்கள் எந்நேரமும் தரிசிக்கும்படி எங்கள் கண்களைத் திறந்து, உமது அன்பின் வல்லமையால் எங்கள் மனதை உம்மிடம் இழுத்து எங்களை ஆட்கொண்டருளும். நாங்கள் ஒன்றிலும் கவலைப் படாமல், உமது கட்டளையின்படி செய்யக்கூடியதைச் செய்து முடிக்க அருள்புரியும். எங்கள் செய்கையின் பலாபலன்கள் ஞானமுள்ள தேவரீரால் மாத்திரம் ஆகும் என்று நாங்கள் உணர்ந்து கொள்ளக் கிருபைசெய்து, எங்கள் அவிசுவாசத்தை நீக்கி பூரணமான நம்பிக்கையைக் கட்டளையிட்டருளும். உமது குமாரனும் எங்கள் மீட்பருமாகிய கிறிஸ்துவின் மூலமாய் எல்லாவற்றையும் செய்ய எங்களுக்குப் பெலனுண்டென்று அறிந்து கொள்ளவும், பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய உம்மிடம் எங்கள் இருதயங்களை உயர்த்தவும் எங்களுக்கு உமது பரம கிருபையைத் தந்தருள வேண்டுமென்று அவரை முன்னிட்டுத் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

3. தூய்மைக்காக.

நித்திய பராபரனே, எங்கள் சரீரம் பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமென்று வெளிப்படுத்தினவரே, இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் அனைவரோடுங்கூட நாங்கள் உம்மைத் தரிசிக்கவும், உமது பரம ராஜ்யத்தில் தேவரீருக்கு ஒப்பாகவும், நாங்கள் நினைவிலும் வார்த்தையிலும் செய்கையிலும் தூய்மையும் பரிசுத்தமுமுள்ளவர்களாயிருக்கும்படி எங்களைக் காத்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அதிகத் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

4. சத்திய ஆவி அருளப்பட.

சகல சத்தியத்திற்குள்ளும் எங்களை நடத்தும்படி சத்திய ஆவியை அனுப்பின சர்வ வல்லமையுள்ள கடவுளே, நாங்கள் வார்த்தையிலும் செய்கையிலும் நினைவிலும் உண்மையுள்ளவர்களாயிருக்கும்படி, உமது வல்லமையினால் எங்களை ஆட்கொண்டருளும். இரக்கமுள்ள பிதாவே, நாங்கள் பயத்தினாலாவது துர் ஆசையினாலாவது பொய்யராகாதபடி எப்பொழுதும் எங்களைக் காத்தருளும். பொய்யானதை விரும்பி அதின்படி செய்யும் சுபாவத்தை எங்களிடத்தினின்று அகற்றி எங்களை விடுதலையாக்கும் சத்தியத்திற்குள்ளாக எங்கள் எல்லாரையும் வழிநடத்த வேண்டுமென்று, உமது குமாரனும் எங்கள் நாதருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

5. அனுதாப சிந்தைக்காக.

நேச கர்த்தராகிய கிறிஸ்துவே, எங்கள் நிமித்தம் ஏழையாகவும் துக்கப்படவும், மரணமடையவும் சித்தங்கொண்டவரே, நாங்கள் எங்களை வெறுத்து உம்மைப் பின்பற்றும்படி எங்கள்மேல் உமது ஆவியைப் பொழிந்தருளும். உபத்திரவப் படுகிறவர்களை ஆதரிக்கவும், ஒன்றுமில்லாதவர்களுக்கு ஒத்தாசை செய்யவும், அதைரியப்படுகிறவர்களைத் தேற்றவும், கஷ்டப்படுகிறவர்களின் பாரங்களைச் சுமக்கவும்

அன்பப்படுகிற யாவரிலும் உமது திவ்விய சாயலைக் காணவும் உமது பேரன்பினாலே எங்களுக்குச் சகாயஞ் செய்தருள வேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

6. திவ்விய அன்புக்காக.

சகல நன்மைக்கும் கிருபைக்கும் காரணராகிய பராபரனே, உமது அன்பின் அளவு இன்னதென்று அறியவும் அதற்குத் தகுந்தபடி உம்மை நேசிக்கவும் எங்களால் முடியாதிருந்தும், நாங்கள் எல்லாவற்றிலேயும் உம்முடைய சித்தத்தைச் சந்தோஷமாய் நிறைவேற்றவும், உமது திருநாமத்தினிமித்தம உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகிக்கவும், உமது பேரிலுள்ள அன்பினால் எங்கள் இருதயங்களை நிரப்பியருளும். நாங்கள் அனுதினமும் உமது சாயலின்படி மென்மேலும் மறுரூபமடையவும், உம்மை நேசிக்கிறவர்களுக்கு நீர் வாக்கு அருளிய நித்திய ஜீவ கிரீடத்தை இறுதியில் பெற்றுக்கொள்ளவும் தேவரீர் அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

7. கிறிஸ்தவர்களின் ஐக்கியத்திற்காக.

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேனென்று அப்போஸ்தலருக்குத் திருவுளம்பற்றின எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, எங்கள் பாவங்களை எண்ணாமல் உமது திருச்சபையின் விசுவாசத்தை அங்கீகரித்து, உமது சித்தத்திற்கு ஏற்ற சமாதானத்தையும் ஐக்கியத்தையும் அனுக்கிரகித்தருள வேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

8. மரித்துப்போன விசுவாசிகளுக்காக.

சகல ஆத்துமாக்களுக்கும் தேவனுயிருக்கிற சர்வ வல்லவரே, கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்களென்று வெளிப்படுத்தினவரே, கிறிஸ்துவுக்குள் நித்திரை செய்கிறவர்கள்மேல் உமது அன்பின் ஆசீர்வாதங்களைப் பெருகப்பண்ணி, நீர் அவர்களுக்குள் செய்யத் தொடங்கின நற்கிரியையை இயேசு கிறிஸ்துவின் நாளுக்கென்று பூரணப்படுத்தியருளும். பரம பிதாவே, இம்மையில் உம்மைச் சேவிக்கிற நாங்களும், மறுமையில் அவர்களோடுகூட ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியுள்ளவர்களாய்க் காணப்படும்படி கடாட்சித்தருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

அல்லது

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று எங்களுக்கு வெளிப்படுததியிருக்கிற கடவுளே, கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்களில் நீர் செய்த இரட்சண்யக் கிரியைக்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். அவர்கள் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கிறதுபோல நாஙகளும் நிலைத்திருக்கக் கிருபை தந்து, எங்களில் நீர் தொடங்கிய நற்கிரியையைப் பூரணப்படுத்தி, கடைசியில் தேவரீர் உமது பரிசுத்தருக்கென்று ஆயத்தம் பண்ணியிருக்கிற பரம சுதந்தரத்தை அவர்களுக்கும் எங்களுக்கும் கட்டளையிட்டருள வேண்டுமென்று, உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிற எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஸ்தோத்திரங்கள்.

1. எங்கள் தேவனாகிய பராபரனே, நித்திய பிதாவே, எல்லாருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரே, தேவரீர் எங்களுக்கும் மற்றெல்லா மனிதருக்கும் அருளிச்செய்திருக்கிற அளவில்லாத ஆசீர்வாதங்களுக்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். எங்களைக் காப்பாற்றி

வருகிற உமது அன்புள்ள பராமரிப்புக்காகவும் தேவரீர் எங்களுக்குச் சுதந்தரமாகத் தந்திருக்கிற உமது நல்ல சிருஷ்டிப் பொருட்களுக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். விசேஷமாய், இயேசு கிறிஸ்துவை எங்களுக்கு இரட்சகராக அனுப்பினதற்காகவும், அவர் மூலமாய் நாங்கள் பெற்றிருக்கிற கிருபையின் யத்தனங்களுக்காகவும், மகிமை அடைவோம் என்கிற நம்பிக்கைக்காகவும் தேவரீரை ஸ்தோத்திரிக்கிறோம். நாங்கள் உம்மைச் சேவிக்கிறவர்களாய் நடந்துவரவும் உமக்கு உகந்தவர்களாய் நித்திரை அடையவும் எங்களுக்குக் கிருபை தந்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

II. நித்திய தேவனே, உமது தயவுள்ள கரத்தினால் எங்களைக் காப்பாற்றி வருகிற பராபரனே, இந்த நாளில் நீர் எங்களுக்குப் பாராட்டிய இரக்கத்திற்காக உம்மைத் துதிக்கிறோம். தேவரீர் உமது கிருபைகளைப் புதுப்பித்துத் தந்ததற்காகவும், இன்று நாங்கள் கேட்டதும் வாசித்ததுமான நல்ல வார்த்தைகளுக்காகவும், உமது தூய ஆவி எங்கள் மனதில் உண்டாக்கியிருக்கிற பரிசுத்த சிந்தனைகளுக்காகவும் நல்விருப்பங்களுக்காகவும் உம்மைத் துதிக்கிறோம். கர்த்தாவே, இவைகள் பயனற்றுப் போகாதபடி, இவற்றின் மூலமாய் எங்களிடத்தில் உமது திவ்விய சித்தம் நிறைவேறவும் உமது அன்பின் கிரியை பூரணப்படவும் கிருபை செய்தருள வேண்டுமென்று தேவரீரைத் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

III. எங்கள் கர்த்தராகிய தேவனே, முழு மனதோடே உம்மை ஸ்தோத்திரித்து உமது திருநாமத்தைப் போற்றுகிறோம். அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கும் எங்கள் வீட்டாருக்கும தேவரீர் அருளிச்செய்த நன்மைகளும் ஆசீர்வாதங்களும் எத்தனை அநந்தம். நாங்கள் விரும்பினதை நீர் எஙகளுக்குக் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், முன் கொடுத்ததை எடுத்துக்கொண்டாலும், எல்லாம் உமது அன்பின் செய்கை என்று உணரவும் அறியவும்

எங்களுக்குக் கிருபை தந்தருளும். தேவரீர் எங்களைச் சிருஷ்டித்ததற்காகவும், காப்பாற்றுகிறதற்காகவும், இம்மைக்குரிய நன்மைகளுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் உம்மைத் துதிக்கிறோம். விசேஷமாய், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவரீர் எங்களை அழைத்த தயவுக்காகவும், உமது நீடிய பொறுமைக்காகவும், நீர் அருளும் பாவ விமோசனத்திற்காகவும், உமது சித்தத்தையும் உமது சத்தியத்தையும் அறிந்துகொள்ளும் அறிவுக்காகவும், அவர் மூலமாய் நித்திய ஜீவனை அடைவோம் என்னும் நன்னம்பிக்கைக்காகவும், அதிக நன்றியறிதலோடே உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம், கர்த்தாவே. **ஆமேன்.**

Printed at the Hilal Press, Tirunelveli—5-'41.

அறுப்பின் பண்டிகை ஆராதனை முறைமை

ஒரு கீதத்தை அல்லது கீர்த்தனையைப் பாடிய பின், குருவானவரும் சபையாரும் பின்வரும் வாக்கியங்களை மாறிமாறிச் சொல்லுவார்கள் :—

குரு: **பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை. ஆதி. 8: 22.**

மறு: இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது. அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்; ஏசாயா 28 : 29.

குரு: **உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தையாகிய உன் மிருக ஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். உபாகமம் 28 : 4.**

மறு: நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக. யாத். 23 : 16.

குரு: **இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம், இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம் பண்ணுவேன்.**

மறு: அதின் ஆகாரத்தை நான் ஆசீர்வதித்து வருவேன். அதின் ஏழைகளை நான் அப்பத்தினால் திருப்தியாக்குவேன். சங்கீதம் 132 : 14, 15.

குரு: **இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன் மாரியும் பின் மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்.**

நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. யாக்கோபு 5: 7, 8.

¶ பின் வரும் சங்கீதங்களில் ஒன்று அல்லது இரண்டு வாசிக்கப்படும்.

65, 67, 103, 104, 144, 145, 147, 148, 150

அல்லது பின்வரும் கீர்த்தனத்தை வாசிக்கலாம்.

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி: என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி: அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப் பாய்ச்சுகிறீர்: தண்ணீர் நிறைந்த தேவநதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்: இப்படி நீர் அதைத் திருத்தி அவர்களுக்குத் தானியத்தை விளைவிக்கிறீர்.

அதின் வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால்களுக்குத் தண்ணீர் இறைத்து: அதை மழைகளால் கரையப் பண்ணி, அதின் பயிரை ஆசீர்வதிக்கிறீர்.

வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்: உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.

எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது: ஏற்றவேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங் கொடுக்கிறீர்.

நீர் உமது கையைத்திறந்து: சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்.

கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும்; தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்.

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும்: உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து: அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.

அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்: மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள்.

சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக: அல்லேலூயா.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமேன்.

¶ பின் வரும் பாடங்களில் ஒன்று வாசிக்கப்படும்.

உபா.	26 : 1—11	உபா.	8 : 7—18.
மத்தேயு	6 : 24—34	1 கொரி.	15 : 35—49.
யோவான்	6 : 22—35	அப்.	14 : 11—17.

¶ பின் இந்தக் கீதம் பாடப்படும் அல்லது வாசிக்கப்படும்.

கர்த்தர் சிருஷ்டித்த சகல சிருஷ்டிகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

வானங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மழையே, பனியே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

தேவனுடைய காற்றுகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

அக்கினியே, உஷ்ணமே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மாரிகாலமே, கோடைகாலமே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

இரவே, பகலே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

ஒளியே, இருளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மின்னல்களே, மேகங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மலைகளே, குன்றுகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பூமியில் முளைத்தெழும்பும் எல்லாத் தாவரங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

ஆகாயத்துச் சகல பறவைகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

காட்டு மிருகங்களே, நாட்டு மிருகங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மனுமக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

கர்த்தரின் ஊழியக்காரரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

நீதிமான்களின் ஆவிகளே, ஆத்துமாக்களே : கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பரிசுத்தமும் தாழ்மையுமுள்ள இருதயமுடைய மனிதர்களே : கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் : மகிமையுண்டாவதாக ;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான : சதா காலங்களிலும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

எல்லாரும் நின்றுகொண்டு விசுவாசப் பிரமாணத்தைச் சொல்லுவார்கள்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்: பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் : அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவமன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

எல்லாரும் முழங்காற்படியிட்டிருக்க, பின்வரும் லித்தானியா சொல்லப்படும்

ஜெபம் பண்ணக்கடவோம்.

1. தேவரீர் உம்முடைய அடியாராகிய எங்களுக்குச் செவிசாய்த்து, நாங்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எங்களை ஆசீர்வதித்துக் காப்பாற்றியருளவேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

2. தேவரீர் மழைகளையும் நல்ல காலங்களையும் கொடுத்து எங்களையும் மற்றெல்லா மனிதரையும் போஷிப்பித்தருள வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

3. சமுசாரிகள் செய்யும் எல்லா வேலைகளையும் ஆசீர்வதித்தருளவேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

4. நாங்கள் விதைக்கிற விதையை ஆசீர்வதித்து அது முளைக்கவும் ஏற்ற காலத்தில் நல்ல பலனைக் கொடுக்கவும் கிரியை செய்தருளவேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

5. எங்கள் ஆடுமாடுகளைக் காப்பாற்றி அவைகள் பெருகும்படி கிருபை செய்தருளவேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

6. தேவரீர் தந்தருளிய நன்மைகளை நாங்கள் ஏற்ற வாறு அனுபவிக்கும்படி, நன்றியறிதலுள்ள இருதயங்களை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

7. பசியாயிருக்கிறவர்களுக்காகவும் ஒன்றுமில்லாதவர் களுக்காகவும் பரிதபித்து, அவர்களுக்கு வேண்டியதெல்லா வற்றையும் கட்டளையிட்டருள வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

8. நாங்கள் பிறருக்கு நன்மை செய்து உம்மை மகிமைப் படுத்தும்படி தேவரீர் எங்களுக்கு நல்மனதைக் கொடுக்கவேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

9. உம்முடைய வீட்டார் யாவரும் உண்மையோடும் மன உற்சாகத்தோடும் உமக்கு ஊழியஞ் செய்யும்படி அவர் களை உம்முடைய ஆவியினாலே நடத்தியருள வேண்டு மென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

10. உமது திருச்சபை நிறைந்த தேவ பக்தியுள்ள அமரிக்கையோடே உம்மைச் சேவித்து எல்லா மனிதருக்கும் ஒளியாயிருக்கும்படி தேவரீர் உமது சத்தியத்தால் அதைப் பிரகாசிப்பித்தருள வேண்டுமென்று,

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

ஆண்டவரே, எங்கள் அபாத்திரத்தைக் கவனியாமல் எங்களில் தேவரீர் நடப்பித்தவைகளை நினைத்து, உமது ஊழியத்துக்கு எங்களை அழைக்கச் சித்தங்கொண்டதுபோல, அதற்கு எங்களைத் தகுதியுள்ளவர்களாக்க வேண்டுமென்று உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். ஆமென்.

அதன் பின் ஒரு கீதம் அல்லது கீர்த்தனை பாடப்படும்.

பிரசங்கம்

பின்பு ஒரு கீதம் அல்லது கீர்த்தனை பாடலாம்.

அதன்பின் குரு சொல்வதாவது:

கர்த்தர் உங்களோடு இருப்பாராக.

அவர் உமது ஆவியோடும் இருப்பாராக

ஜெபம் பண்ணக்கடவோம்

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

இரக்கமுள்ள தேவனே, உமது கையைத் திறந்து பூமியைச்செழிப்பாக்கி, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தி செய்து ஆசீர்வதித்து வருகிறீர். தேவரீர் கிருபை கூர்ந்து செய்கிற எல்லா நன்மைகளுக்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். எங்களுக்குச் சரீர சம்ரட்சணையாகவும், விசேஷமாய் எங்கள் ஆத்துமாக்களுக்கு ஞானாகாரமாகவும் தேவரீர் ஏற்படுத்தியிருக்கிற எல்லா நன்மைகளுக்காகவும் உம்மைப் போற்றுகிறோம். கர்த்தாவே, நாங்கள் கடைசியில் உமது பரம ராஜ்யத்தில் சேரத் தகுந்தவர்களாகும் படிக்கு, நாளுக்கு நாள் உமது கிருபையை அடைந்து தேறவும், உமது திருச்சபையில் நிலைத்திருந்து பூரணப்படவும் அருள்புரிய வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் மன்றாடுகிறோம். ஆமேன்.

¶ பின்பு சபையார் கீதங்களைப் பாடிக்கொண்டிருக்க, ஒவ்வொருவரும் முன்வந்து தங்கள் காணிக்கைகளைப் படைப்பார்கள். எல்லாரும் படைத்த பின் எல்லாரும் முழங்காற்படியிட்டிருக்க, குருவானவர் முன் சொல்ல, சபையார் சேர்ந்து பின்வரும் ஜெபத்தைச் சொல்லுவார்கள்.

சர்வ வல்லமையும் இரக்கமு முள்ள பிதாவே—இந்த வருஷத்தில் தேவரீர் எங்களுக்கு அருளிச்செய்த—எல்லா நன்மைகளுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும்—அதிக நன்றியறிதலோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்—விசேஷமாய்—தேவரீர் மனுக்குலத்தை விருத்தியடையச் செய்து—எங்கள் மந்தைகளைக்காப்பாற்றி—பூமி ஏற்ற காலத்தில் தன் பலனைத் தரும்படி கிருபை செய்ததற்காக—உம்மைத் துதிக்கிறோம்—இந்த நன்மைகளை நாங்கள் நினைவு கூர்ந்து—நீர் அருளிச் செய்தவைகளின் ஒரு பாகத்தைக் கொண்டுவந்து—சந்தோஷம் நிறைந்தவர்களாய்—தேவரீருக்கு மனதாரச் சமர்ப்பிக்கிறோம் — கர்த்தாவே — வரப்போகிற வருஷத்திலும் எங்களை ஆசீர்வதித்தருளும். — இந்தக்

காணிக்கைகளைப் படைக்கிற நாங்கள்—எங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும்—உமக்கு ஜீவபலியாக ஒப்புக் கொடுத்து — எங்கள் வாழ்நாளெல்லாம்—உம்மை உண்மையுள்ளவர்களாய்ச் சேவிக்கும்படி—தேவரீர் எங்களுக்குக் கிருபை செய்தருள வேண்டுமென்று—எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்—உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்—அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும்—எல்லாக் கனமும் மேன்மையும் மகிமையும் — என்றென்றைக்கும் உண்டாவதாக — ஆமென்.

சுருக்க ஜெபம்

பூமியில் தானியத்தை விளைவித்து உமது நன்மையால் வருஷத்தை முடி சூட்டுகிற சர்வ வல்லமையுள்ள கடவுளே, நாங்கள் விதைத்த விதையை நீர் ஆசீர்வதித்து நல்ல பலனைத் தந்தருளின கிருபைக்காக உமக்கு மனத் தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இம்மையில் எங்கள் போஷிப்புக்காக இத்தானியம் எங்கள் களஞ்சியத்தில் சேர்க்கப்பட தேவரீர் கிருபை செய்தது போல, மறுமையில் நாங்களும் நல்ல தானியமாக உமது பரம களஞ்சியத்தில் சேர்க்கப்பட அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக் கொள்கிறோம்.—ஆமென்.

¶ எல்லோரும் சற்று நேரம் அமைதியாயிருந்து ஜெபம் செய்யலாம். பின்பு எல்லோரும் எழுந்து நிற்க; தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தப் படும்.

ஆதியில் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த பராபரனே,

உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

மாறி மாறி வருங் காலங்களையும் அனுகூலமான மழைகளையும் கட்டளையிட்டுப் பூமியைப் பராமரிக்கிற நேசரே,

உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

நீர் உண்டாக்கின மனுக்குலத்துக்குப் பூலோகத்தைச் சுதந்தரமாகத் தந்தருளிய வள்ளலே,

உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் வேண்டியதெல்லாவற்றையும் தந்து எங்களைக் காப்பாற்றி வருகிற தந்தையே,

உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

அறுப்புக் காலத்துக்குரிய சந்தோஷத்தைத் தந்து, எங்களைக் களிகூரப் பண்ணுகிற அருள் நாதரே,

உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

உம் திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை எங்களுக்கு ஜீவ அப்பமாகத் தந்து எங்களை உயிர்ப்பிக்கிற ஜீவனுள்ள தேவனே,

உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

அவர் மூலமாய் நித்திய ஜீவனைப்பற்றிய நன்னம்பிக்கையை எங்களுக்கு அருளிச்செய்யும் நித்தியரே,

உம்மைத் துதிக்கிறோம், தயவுள்ள கர்த்தாவே.

அதன் பின் பொதுவான ஸ்தோத்திரம் வழங்கலாம் :

சர்வ வல்லமையுள்ள தேவனே, சர்வ ஜீவ தயாபர பிதாவே, அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கும் மற்றெல்லா மனிதருக்கும் தேவரீர் அருளிச்செய்த பற்பல கிருபைக்காகவும், அன்புள்ள தயவுக்காகவும், நாங்கள் மிகுந்த

தாழ்மையோடும் முழு இருதயத்தோடும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். தேவரீர் எங்களைச் சிருஷ்டித்ததற்காகவும், காப்பாற்றுகிறதற்காகவும், இம்மைக்குரிய எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் உம்மைத் துதிக்கிறோம். விசேஷமாய் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே உலகத்தை மீட்டுக்கொண்ட விலை மதியாத உமது அன்புக்காகவும், கிருபையின் யத்தனங்களுக்காகவும், மகிமையடைவோம் என்கிற நம்பிக்கைக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் உண்மையாய் நன்றியறிந்த இருதயமுள்ளவர்களாயிருக்கவும், எங்களை உமது ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து, எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கு முன்பாக பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களாய் நடக்கவும், எங்கள் வாக்கினாலே மாத்திரமல்ல, எங்கள் நடக்கையினாலேயும் உம்முடைய புகழைப் பிரஸ்தாபப்படுத்தவும் தேவரீர் செய்த உபகாரங்களெல்லாவற்றையும் உணர்ந்து கொள்ளும் உணர்வை எங்களுக்கு அருளிச் செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும் எல்லா மேன்மையும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

¶ எல்லாரும் எழுந்து நின்று தேவனே உம்மைத் துதிக்கிறோம் என்ற கீர்த்தனத்தைப் பாடலாம்.

ஆசீர்வாதம்

தேவனாகிய பிதா, தேவனாகிய குமாரன், தேவனாகிய பரிசுத்த ஆவி இப்பொழுதும் எப்பொழுதும் உங்களைக் காப்பாற்றி ஆதரித்து ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

Printed at the Hilal Press, Tirunelveli—10-'41.